Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இணைந்து விட்டீர்களா?
நிலவு .com in
யாழ் Online
275, யாழ். வீதி,
மானிப்பாய்.
T.P.0777 740413

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 கார்த்திகை 28 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 30 (13.12.2004) திங்கட்கிழமை இதழ்:74



# எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் இன்று கொழும்பு வருகிறார்!

## அரசாங்கம் - புலிகளுடன் பேச்சு நடத்தத் திட்டம்

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசாங்க மற்றும் விடுதலைப் புலிகள் தரப்பு முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடல் நடத்துவதற்காக – இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் இன்று மீண்டும் கொழும்பு வரவுள்ளதாக நோர்வே தூதரக வட் டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மாதம் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான நோர்வே தூதுக்குழுவினர் இலங்கைக்கு வருகைதந்து புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் ஜனாதிபதி சந்திரிகா ஆகியோ ருடன் பேச்சுக்களை நடத்தினர்.

எனினும் இந்தப் பேச்சுக்களின் மூலம் எந்த முன்னேற்றமும் எட்டப்படாத நிலையில் – கடந்த 27 ஆம் திகதி மாவீரர் நாள் உரையில் அரசாங்கம் உட னடியாக நிபந்தனையற்ற – இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப் படையில் பேச்சு நடத்த வரவேண்டும் என புலிகளின் தலைவர் வே.பிரபா கரன் அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்புக் குறித்து அரசாங்கம் எந் தப் பதிலையும் வழங்காத நிலையில் – விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இன்று கொழும்பு வரவிருக்கிறார். இவர் ஜனாதிபதி சந்திரிகாவுடனும் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடனும் பேச்சு நடத்தவுள்ளதுடன் –

எதிர்வரும் புதன்கிழமை கிளிநொச்சிக்குச் சென்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## கடத்தப்பட்ட யுவதியை உறவினர் மீட்டனர்!

### கோண்டாவில் பகுதியில் பரபரப்பு

(கோண்டாவில்)

கோண்டாவில் டிப்போ மைதா னத்திற்கு அருகே - வீதியால் சென்று கொண்டிருந்த இளம்பெண் ஒருவர் இளைஞர்கள் சிலரால் கடததிச் செல் லப்பட்டதாகத் தெரியவருகிறது.

வெள்ளை நிறக் கார் ஒன்றில் வந்ததாகக் கூறப்படும் இந்த இளை ஞர்கள், கோண்டாவில் வடமத்தி யைச் சேர்ந்த 22 வயதுடைய இளம் பெண்ணையே கடத்திச்செல்ல முற் பட்டனர்.

சம்பவத்தை நேரில் கண்ட அப் பகுதி மக்கள் காரின் இலக்கத்தை கடத்தப்பட்ட பெண்ணின் உறவின ரிடம் தெரியப்படுத்தியதை அடுத்து இளைஞர்கள் சிலர் துரத்திச்சென்ற வேளை, கொக்குவில் நந்தாவில் பகுதியில் காருடன் பெண்ணையும் விட்டுவிட்டு மேற்படி இளைஞர்கள் தப்பியோடிவிட்டதாகத் தெரியவரு கிறது.

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே தன்னை கடத்தியதாக குறித்த பெண் உற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தினேஷ் ராஜரட்ணம் நாடு திரும்பினார்!

(கொழும்பு)

ஈராக்கில் வைத்து கடந்த 28 ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டு ஒரு மாதத்தின் பின்னர் விடுதலை செய்யப்பட்ட இலங்கையரான தினேஸ் ராஜரட்ணம் நேற்றுக் காலை இலங்கையை வந்தடைந்தார்.

இவரும் இவருடன் கடத்திச் செல்லப்பட்ட பங்களாதேஷ் பிரஜை ஆகியோர் அமெரிக்கர்களுக்கு மீண்டும் உதவக்கூடாது என்ற எச் சரிக்கையின் அடிப்படையிலேயே விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.


இதேவேளை - இலங்கையை வந்தடைந்த தினேஷ், தம்மை விடு விப்பதற்காக பாடுபட்ட அனைவருக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### கடற்புலிகளின் மூத்த உறுப்பினர்

## லெப்.கேணல் மறவன் மாஸ்டர் மாரடைப்பால் சாவடைந்தார்!

(யாழ்ப்பாணம்)



கடற்புலிகளின் மூத்த உறுப்பின ரான லெப். கேணல் மறவன் மாஸ்ரர் (எலியாஸ்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் - தாளையடி - வயது 68) நேற்றுமுன் தினம் இரவு 8 மணியளவில் மாரடைப் பால் சாவடைந்தார்.

சனிக்கிழமை காலை யாழ்ப்பாணத் தில் அரசியல் பணிகளை முடித்த பின் னர் மாலை தாளையடியிலுள்ள தனது வீட்டுக்குத் திரும்பிய பின்னர் நெஞ்சு வலியால் பாதிக்கப்பட்ட அவர், உடனடி யாக மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாடகி எம்.எஸ்.சுப்புலட்சுமி 88 ஆவது வயதில் மரணம்!



கர்நாடக இசையை உலகம் முழுவதும் தனது இனிமையான குரலால் பரப்பிய இசைக்குயில் எம்.எஸ்.சுப்புலட்சுமி நேற்று முன் தினம் இரவு 12 மணியளவில் வைத்தியசாலையில் மரணமானார்.

இறக்கும்போது அவருக்கு வயது 88 ஆகும்.

வைரஸ் காய்ச்சலால் உடல் நலம் பாதிக்கப்பட்ட இவர் வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும்போதே நேற்று இரவு மரணமடைந்தார். தற்போது இவரது உடல் கோட்டூர் புரத்திலுள்ள அவரது இல்லத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இன்று மாலை 4.30 மணிக்கு இவரது உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பெசன்ட் நகர் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

16.09.1916 அன்று மதுரையில் சுப்பிரமணியஐயர்-சண்முகவடிவு தம்பதிகளுக்கு மகளாக இவர் பிறந்தார். மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமி என்பதன் சுருக்கம்தான் எம்.எஸ்.சுப்புலட்சுமி.சிறு வயதிலேயே இசைஞானமிக்கவர். இசை மேதைகளான ஸ்ரீனிவாச ஐயங்கார், முசிறிசுப்பிரமணியஐயர், செம்மங்குடி ஸ்ரீனிவாசஐயர் ஆகியோரிடம் ஆரம்பத்தில் முறைப்படி கர்நாடக இசைபயின்ற இவர், 12 வயதிலேயே தனது முதல் இசைக்கச்சேரியை அரங் கேற்றினார்.

ஆரம்பகாலத்தில் பாடகிகள் தான் நடிகைகள் ஆகமுடியுமென்ற நிலை இருந்தது. ஆனாலும் எம்.எஸ்.சுப்புலட்சுமியின் இனிமை யான குரலை கேட்ட படத்தயாரிப்பாளர் கே.சுப்பிரமணியம் தனது சேவாசதன் படத்தின் மூலம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு எல்லைப்பகுதியில் இரு விவசாயிகள் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறத்திலுள்ள வடமுனை -ஊரளுச்சேனையில் இரண்டு விவ சாயிகள் இனந்தெரியாதோரால் சுட் டுக்கொல்லப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் முத்து கிருஸ்ணபிள்ளை (வயது -39) கணபதிப்பிள்ளை உதயகுமார் (வயது-34) ஆகியோரே சுட்டக் கொல்லப்பட்டவர்களாவர்.

இருவரும் தங்களது வீடுகளில் இருந்தபோதே இந்தச் சூட்டுச் சம்ப வம் நடைபெற்றுள்ளது.



நாட்டுப்பற்றாளர் சொக்கனின் பூதவுடலுக்கு விடுதலைப் புலிகள் தமிழீழத் தேசியக்கொடி[illegible]ய போர்த்தி கௌரவமளித்திருப்பதை படத்தில் காணலாம்.

# நாட்டுப்பற்றாளர் சொக்கனின் மறைவு ஈழத்தின் கல்வி புலத்துக்குப் பேரிழப்பு

## தமிழர் ஆசிரியர் சங்கம் இரங்கல்

கல்விப்புலத்தில் ஆசிரியராய், அதிபராய், விரிவுரையாளராய், பாட நூல் எழுத்தாளராய் நாடக ஆசிரியராய் பிற்காலத்தில் சிறந்த ஆலோசகராய் மிளிர்ந்து தமிழுக்கும் சைவத்துககும் பெரும் தொண்டாற்றிய சொக்கன ஐயாவின் மறைவு கல்விப் புலத்திற்கு பேரிழப்பாகும் என இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

பார்ப்பதற்கு குறுமுனியாய் தூய வெள்ளாடையுடன அமைதியாக மூன்று சகாப்தங்கள் தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்திற்கும், தமிழ் மாணவர் சமூகத்திற்கும், அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது. அவர் இறக்கும்வரை தமிழே தனது மூச்சு என்றும், சேவையே தனது வாழ்க்கை என்றும் வருங்கால சமூகத்துக்கு அர்ப்பணித்த சொக்கன் ஐயா என்பது யதார்த்தமான பெரியதோர் உண்மையாகும்.

அவர்படைத்த பல ஆக்கங்கள் பல பாடநூல்களில் இருக்கின்றது. வருங்காலத்திலும் இருக்கும் இந்த நிலை, அவரின் எழுத்துருவாக்கங்களுக்கும் அவரது சீரிய தமிழ் பணிககும் கிடைத்த பெரும் கௌரவமாகும.

தமிழ் மொழியின் மீது இருந்த பற்றும் அதனை ஐயந்திரிபுரக் கற்றறிந்ததன் பயனாகவும் பொது மேடைகளில், தமிழ்மொழியில் மாணவர்களிடையே குறைந்துவரும் அக்கறையையும் தமிழ் மொழியை பல்வேறு வழிகளில் சிலர் பிழையாக கையாளும் நிலையையும் தமிழ் மொழிக்காக உருவாக்கப்பட்ட பல அமைப்புகளில் பிரதானமான பதவிகளில் இருந்து இறுதி மூச்சுள்ள வரை துணிவோடு உரத்த குரலில் முழக்கமிட்ட பெரியதோர் விருட்சம் சரிந்துவிட்டது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மூதறிஞர் சொக்கன் மறைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு தமிழ் கூறும் நல்லுலகே கண்ணீர் வடிக்கின்றது. தனது இறுதி மூச்சுவரை தமிழுக்காகவே வாழ்ந்து வந்து 'சொக்கன் சிறுகதைகள்' தொகுப்பைத் தயாரித்துக்கொண்டிருந்த வேளையிலே காலமானார் என்பது வருந்தத்தக்க செய்தியாகும் என லண்டன் தமிழினி மஞ்சரி ஆசிரியர் மா.குலேந்திரன் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

யாழ்.வலய தமிழ்த்துறை உதவிக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ். ஸ்ரீதயாளன் தனது அனுதாபச் செய்தியில் -

அதிர்ச்சிதரும் செய்தியறிந்து துயருறுகிறோம். பாரம்பரியக் கல்வி முறைக்கும், நவீன கல்வி முறைக்கும் தொடர்புதேடி, தாமும் கற்று கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் தக்க வழியில் வழிகாட்டி வந்தவர் தமிழ் மூதறிஞர் சொக்கன்.

கல்வித்திணைக்களம் சார்பாக நாம் நடத்துகின்ற செயலமர்வு, கருத்தரங்குகளுக்கெல்லாம் தமக்கே உரித்தான ஒரு பாணியில் ஆங்கில உவமானங்களோடு அவர் விளக்கமளிக்கும் உத்தி அபாரம். தமிழ் உலகுக்கு குறிப்பாக எம் பிரதேசத்தின் தமிழ் கல்விவிருத்தி நாடும் துறையினருக்கு சொக்கன் ஐயா ஆற்றிய பணியைப்போல் யார் செய்யவல்லார்?

இயற்றுறைக்கும் நாடகத்துறைகளும் அவராற்றிய பணிகளும் அத்துறைகளில் அவர் எழுதிய நூல்களும் இலக்கண இலக்கிய ஆக்கங்களும் அவரின் அளப்பரிய தமிழ் அறிவை விளக்கும். யாழ். மண்ணில் மட்டுமல்ல நம் பிரதேசத்தின் தமிழ் அன்பு நெஞ்சங்களி லெல்லாம் ஐயாவின் பிரிவு பெரிய அதிர்ச்சியைத் தந்து நிற்கிறது என குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

நாகராசா சசிகரன் ஆகிய எனது சாரதி அனுமதிப் பத்திரமும், நிரந்தர பயண அனுமதி அட்டையும் 12.12.2004 ஞாயிறு காலை 8-10 மணிக்கிடையில் முகமாலை, கிளிநொச்சி - தருமபுரத்திற்கு இடைப்பட்ட பிரதான வீதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் புலிகளின் குரல் நிறுவனத்தில் ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். நா.சசிகரன், கலவெட்டித்திடல், புளியம் பொக்கனை. (சி/3463)


நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
இளைய தளபதி விஜய், (குளிரூட்டப்பட்டது)
சங்கவி, கவுண்டமணி, செந்தில் நடித்த
கோயம்புத்தூர் மாப்பிள்ளை (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30 2.30 (பு.நே)
தினசரி இரவு 6.30, 9.00 [பு.நே]
THE LORD OF THE RINGS

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், நிகிதா நடித்த
சத்ரபதி (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
SPIDER MAN - 2

ராஜா யாழ்ப்பாணம்.
14ம் திகதிவரை
இந்தியாவில் 200 நாட்கள் ஓடி சாதனை புரியும்
சிறந்த படத்திற்கான பரிசு பெறவுள்ள சித்திரம் -
குடும்பத்துடன் பார்க்க வேண்டிய படம்
சேரன், சிநேகா, கோபிகா நடித்த
ஆட்டோகிராப் (ரீல்ஸ்)
புதிய நேரம்: 10.30. 2.30. 6.30 மட்டும்

நாகம்ஸ் சுன்னாகம்
அஜித், பூஜா மற்றும் பலர் நடித்த
அட்டகாசம்
கா.நே 11.00, 3.00, 7.00 (பு.நே)
மிக விரைவில்
அடுத்த வெளியீடு
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதினம்
அர்ஜின், லைலா,
வடிவேல் நடித்த

ஜெய் சூர்யா



YOGI HOME SCIENCE ACADEMY
X MAS DEMONSTRTION CLASSES
பண்டிகைக் கால மனையியல் செய்முறை
விளக்க வகுப்புகள் 3 நாட்கள் மட்டும்
2004 DECEMBER 18,19,20 ஆம் திகதிகளில் காலை 10.00 மணி முதல் 4.00 மணிவரை இலகுவாகவும், வித்தியாசமாகவும் விரைவாகவும் செய்யும் 6 கேக் கலவைகள் 6 பேஸ்ரி வகைகள் (Pastries) 6 Sweets வகைகள்
சேர விரும்புவோர் உடன்
தொடர்புகொண்டு பதிவுசெய்து
கொள்ளவும்.
75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக).
(C 3440)


## கண்ணீர் அஞ்சலி




நாட்டுப் பற்றாளர்
இலக்கிய கலாநிதி
க.சொக்கலிங்கம்
(சொக்கன்)
அவர்கள்

தமிழ் மொழிக்காகவும் – தமிழ்த் தேசிய விடுதலைக்காகவும் அயராது பாடுபட்டு வரலாறாகிவிட்ட அமரரின் பிரிவு துயரில் நாமும் பங்குகொண்டு குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

– சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை

(C/3462)

## இதய அஞ்சலி



### லெப்.கேணல் மறவன் மாஸ்ரர் (ஸ்ரைனிஸ்)

(கடற்புலிகளின் மூத்த உறுப்பினரும், கடற்தொழிலாளர் சங்கம், சமாசம், சம்மேளனம் ஆகியவற்றின் மேலாளரும்)

பொங்கும் !
அமைதியும்,
தாய் மடியின் கடல் உறவில்
அள்ளிக்கொண்டு வந்து
பங்கிட்டாலும் பிரிக்கமுடியாத
வரவில்
அலைவீசும் நெருக்கத்தில்
கடலையும் தரையையும்
சேர்ந்துவிட்ட களிப்பில்
பிரிந்தது!

எமது சமூகத்திற்காக அல்லும் பகலும் உழைத்த அன்னாருக்கு இதய அஞ்சலியை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
வடமராட்சி வடக்கு
பருத்தித்துறை

## கண்ணீர் அஞ்சலி



தமிழ்மொழியின் ஆழவேரறிந்த மூத்தோன், எம்மொழியின் சீரையும், செம்மையையும் மொழியின் வழுவிலா இலக்கண வகையையும் தெரிந்த பேரறிஞர். உடல் தளர்ந்திருந்த காலத்திலும், கலை இலக்கியத்து அரங்குகளில் கலந்து, புதிய தலைமுறை ஒன்று புலர்வதற்கு பெரும்பணியாற்றிய மூதறிவாளன். கலை, இலக்கியம், மொழி என்பவற்றுடன் எம்மண்ணையும் நேசித்த நாட்டுப்பற்றாளன் -

### கலாநிதி கந்தசாமிச்செட்டி சொக்கலிங்கம்

### (சொக்கன்)

அவர்களது மறைவினால் துயருறும் குடும்பத்தினருடனும், கலை இலக்கியப் படைப்பாளிகளுடனும் நாங்களும் இணைந்து கொள்வதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள், கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம், கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம்.

கரவெட்டி. (சி-3491)

# பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியிலும் குண்டு எவ்வாறு கொண்டு செல்லப்பட்டது?

## விசாரணைகள் தீவிரம்

பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டு, பார்வையாளர்கள் சோதனையிடப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு கைக்குண்டு எவ்வாறு கொண்டு செல்லப்பட்டது என்பது குறித்து இதுவரை கண்டறியப்படவில்லை என கறுவாத் தோட்டம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் இந்திய கலைஞர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாகத் தகவல் வெளியிட்டுள்ள பொலிஸார் -

நள்ளிரவு 11.30இற்கு நிகழ்ச்சி நிறைவடைய இருந்த சமயம், அதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாக பார்வையாளர் முன் வரிசையிலிருந்து இந்தக் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

வீசப்பட்ட கைக்குண்டு இந்திய கலைஞர்களை நோக்கி வீசப்பட்ட போதிலும் அது மேடைக்கு முன்பாக வீழ்ந்து வெடித்தமையினால், கலைஞர்களுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

வீசப்பட்ட கைக்குண்டின் கிளிப் முன்வரிசையில் காணப்பட்ட சம்பவம் நடந்த 25 ஆயிரம் பேர் வரை கலை நிகழ்ச் சியைப் பார்வையிடுவதற்கு மைதா னத்தில் கூடியிருந்தனர்.

இதில் 25 பேர் வரை காயமடைந்துள்ள போதிலும், இரண்டு இந்திய பிரஜைகள் உட்பட 12 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் சிறுவர்களும் அடங்குகின்றனர். 4 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. உயிரிழந்த பெண் உட்பட இருவரினது சடலங்களும் மரண விசாரணையின் பின்பு, உறவினர்களிடம் கையளிக்கப்படவிருக்கிறது.

இதேவேளை இந்திய கலைஞர்கள் நேற்று அதிகாலை விமானம் மூலம் நாடு திரும்பியுள்ளனா.



வெடிப்பில் காயமுற்ற ஒருவர்



குண்டுவெடிப்பு நடத்த இடத்தில் படையினர் விசாரணை

# தரம் குறைந்த பீரங்கிக் குண்டுகள் யூகோஸ்லாவியாவிலிருந்து இறக்குமதி!

## இராணுவ விசாரணைகள் ஆரம்பம்

யூகோஸ்லாவியாவிடம் இருந்து இலங்கை இராணுவத்துக்கென 10 ஆயிரம் பீரங்கி ஷெல்கள் கொள்வனவு செய்யப்பட்டதில் முறைகேடு இடம் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் இராணுவத்துக்கெனப் பத்தாயிரம் ஷெல்கள் யூகோஸ்லாவியாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

கவசவாகனங்களுக்கான செல்கள் கொள்வனவிலேயே இந்த முறைகேடு இடம்பெற்றிருப்பதாகக் கருதப்படுகிறது. இராணுவத்தின் கேணல் பதவியில் இருந்த முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவரின் உள்ளூர் நிறுவனம் ஊடாகவே இந்தக் கொள்வனவு இடம்பெற்றது.

யூகோ எக்ஸ்போட் என்ற நிறுவனத்திடமிருந்து பி.ரி.ஆர் - 80 மற்றும் பி.எம்.பி - 2 ரக கவச டாங்கிகளுக்குரிய 30 மில்லி மீற்றர் உயர் சக்தி வெடிபொருள் ஷெல்கள் வாங்கப்பட்டிருந்தன. இந்தக் கொள்வனவுக்காக பாதுகாப்பு அமைச்சு 2 கோடி 70 லட்சம் ரூபாவைச் செலவிட்டிருந்தது.

ஆனால் இந்தப் பீரங்கிச் ஷெல்கள் தரமற்றவை என்றும் - இவை காலாவதி திகதியைக் கடந்து பயன்பாட்டுத் தன்மை குறைவாக இருப்பதாகவும், இதனால் இந்தக் கொள்வனவில் முறைகேடு இடம்பெற்றிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. இந்த ஷெல்கள் கப்பலில் வந்து சேர்ந்த பின்னர்தான் இவற்றின் தரம் குறித்த சந்தேகம் எழுந்துள்ளது.

இதையடுத்து இது தொடர்பாக உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. இந்த ஷெல்கள் இராணுவ நிபுணர்கள்மூலம் பரிசோதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்க கருத்து வெளியிடுகையில்-

நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே இராணுவத்துக்கான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுகின்றன. இதன் போது கடுமையான பரிசோதனைகள் நடத்தப்படுவது வழமை. ஆயினும் தற்போது இந்த பீரங்கி ஷெல்கள் கொள்வனவு தொடர்பான பிரச்சினைகள் குறித்து விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. இந்த விசாரணைகளில் குறிப்பிட்ட ஷெல்களின் தரம் குறைவாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவை யூகோஸ்லாவியாவுக்கே திருப்பி அனுப்பப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு விமானப் பறப்புக்களை மேற்கொள்வதில்லை

## விமானப்படை முடிவு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கு இனிமேல் உலங்கு வானூர்தி சேவையை வழங்குவதில்லை என்று விமானப்படை முடிவெடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கோ அல்லது வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு இடையிலோ புலிகளின் பிரதிநிதிகளுக்கான போக்குவரத்து சேவையை இனி மேற்கொள்வதில்லை என்று, பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து நடத்திய ஆலோசனையின் பின்னர், விமானப்படை தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நோர்வே அனுசரணையாளர்கள் மற்றும் இராஜதந்திரிகளையும் இனிமேல் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு அண்மையில் உள்ள விமானநிலையம்வரை விமானபபடையினர் கொண்டு சென்று விடுவது என்றும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அவர்கள் தரைமார்க்கமாகவே செல்லவேண்டும் எனவும் விமானப்படை முடிவெடுத்துள்ளது.

இதன் பிரகாரம் இன்று இலங்கைக்கு வரும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வதற்கு விமானப் படை உலங்கு வானூர்தி சேவையை வழங்கப்போவதில்லை என்றும், பலாலி விமான நிலையம் வரை சொல்ஹெய்ம் விமானத்தில் கொண்டு சென்று விடப்படுவார் என்றும் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு அவர் தரைமார்க்கமாகவே செல்வார் என்றும் தெரியவருகிறது.

# புலிகள் - முஸ்லிம்கள் சந்திப்பு விரைவில் மீண்டும் ஆரம்பமாகும்!

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையில் இடம்பெற்று வந்த மாதாந்த சந்திப்புகள் மீண்டும் விரைவில் இடம்பெறுமென, விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் நம்பிக்கை தெரிவித்தார்.

தவிர்க்கமுடியாத சில காரணங்களால் கடந்த சில மாதங்களாக இத்தகைய சந்திப்புக்கள் இடம் பெறமுடியாமல் போய்விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழர் தாயகத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையேயான நல்லுறவு கட்டிவளர்க்கப்பட்டு வருகிறது. இதற்கு மேலும் வலுவூட்டுவதான புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகளுக்கடையிலான இடைநிறுத்தப்பட்ட சந்திப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (07)

## இராணுவ பெண்கள் படைப்பிரிவுக்கு

# மேஜர் ஜெனரல் ரி.ரி.ஆர்.சில்வா புதிய தளபதியாக நியமனம்!

இராணுவத்தின் பெண்கள் படைப் பிரிவுக்கான கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் ரி. ரி. ஆர் சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இராணுவத்தளபதி இந்த நியமனத்தைச் செய்திருக்கிறார்.

கொழும்பு பகுதிக்கான நடவடிக்கை கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் ரி.ரி. ஆர் சில்வா இந்தப் பொறுப்பை மேலதிகமாகக் கவனிக்கவுள்ளார்.

இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவை ஒழுங்குபடுத்துவதற்காக- இராணுவத்தளபதியாகப் பதவியேற்ற பின்னர், லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட செய்துள்ள மூன்றாவது மாற்றம் இதுவாகும்.

சுமார் ஒரு வருடமாக நிரப்பப் படாமல் இருந்த பெண்கள் படைப் பிரிவின் முதலாவது பற்றாலியன் கட்டளைத் அதிகாரி பதவி மற்றும் படைப்பிரிவு தலைமையக கட்டளை அதிகாரிப் பதவிகளுக்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் புதிய நியமனங்கள் செய்யப்பட்டன.

எதிர்வரும் செம்ரெம்பரில் 25 ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடும் பெண்கள் படைப்பிரிவை ஒழுங்கு படுத்துவ தற்கு இராணுவத்தளபதி அதிக கவனம்செலுத்தி வருகிறார்.

இராணுவப் பெண்கள் படைப்பரிவல் கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் திம்பொட்டுமுனுவ இரண்டரை ஆண்டுகளாக படைப்பிரிவில் தலை மைக்கட்டளை அதிகாரியாக லெப். கேணல் பிரசாந்தி பெரேரா 07 வருடங்களாகத் தொடர்ச்சியாகப் பணியாற்றி இருந்தார். இவர்கள் தற்போது ஓய்வு பெற்றதையடுத்தே இந்தமாற் றம் செய்யப்பட்டுள்ளது. இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவில் ஒரு நிரந்தர மற்றும் நான்கு தொண்டர் படையணிகளைக் கொண்டிருக்கின்றது. இந்தப் படையணிகள் யாழ்ப்பாணம், மதவாச்சி, அநுராதபுரம், தெகியத்தகண்டி, கொழும்பு ஆகிய இடங்களில் நிலைகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# சாதாரணதரப் பரீட்சை இன்று முதல் ஆரம்பம்

கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைகள் இன்று நாடு முழுவதிலும் ஆரம்பமாகவிருப்பதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்திருக்கிறது.

இந்தப் பரீட்சைகளை ஒழுங்குபடுத்துவதற்கு 529 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 3827 பரீட்சை நிலையங்களில், 5 லட்சத்து ஆயிரத்து 230 பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். டிசம்பர் 23 ஆம் திகதிவரை இப்பரீட்சை தொடர்ந்து நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோரில் 1 லட்சத்து 26 ஆயிரத்து 819 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளதாகத் தெரியவருகிறது.

பரீட்சைகள் முடிவுற்றதும் இரண்டு கட்டங்களாக விடைத்தாள் மதிபபீட்டுப் பணிகள் இடம்பெறவுள்ளன. முதற் கட்டமாக ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 10 ஆம் திகதிவரை, 91 நிலையங்களில் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெறும். இரண்டாம் கட்டமாக ஜனவரி 29 ஆம் திகதிமுதல் பெப்ரவரி 6 ஆம் திகதிவரை விடைத்தாள் மதிப்பீடு இடம் பெறுமெனப் பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

# அழிவுப் பாதையில் அரசு செல்கிறது!

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

அரசாங்கம் அழிவுப் பாதையில் சென்று கொண்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை செய்துள்ளார்.

வெலிக்கடைச் சிறைக்குச் சென்று, முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவைச் சந்தித்துப் பேசிய பின்னர்- நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் செய்தியாளர்களிடம் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்-


நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்கவுக்கு வழங்கப்பட்ட தண்டனை ஜனநாயகத்துக்கு விழுந்த அடியாகும்.

உயர் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்புக் குறித்து பகிரங்கமாகப் பேசவும், கருத்து வெளியிடவும் அஞ்சப் போவதில்லை. தவறுகளை சுட்டிக் காட்டிக் கருத்து வெளியிடுவதை எவரும் தடுக்க முடியாது.

அரசாங்கம் அழிவுப் பாதையின் விளிம்பில் போய்க் கொண்டிருக்கிறது. இந்தத் தண்டனை - எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை வேட்டையாடுவதற்கான நடவடிக்கையாகும். எஸ்.பி.திஸநாயக்கா தனக்காக எவரும் ஜனாதிபதியிடம் மன்னிப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை விடுக்கவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

அவரது விடுதலைக்காக அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.


இதேவேளை, எஸ்.பி.திஸநாயக்கவை ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்களான தி.மகேஸ்வரன், ராஜித சேனாரத்ன உட்பட்ட குழுவொன்று பார்வையிட நேற்று முன்தினம் சிறைச்சாலைக்குச் சென்றிருந்த போதும், சிறைச்சாலை ஆணையாளர் அதற்கு அனுமதி மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது.



இதற்கிடையில் சட்டத்தரணிகள் குழுவொன்றும் எஸ்.பி.திஸநாயக்காவை சந்தித்து, எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட நடவடிக்கை குறித்தும் ஆராய்ந்துள்ளது.

# விலைமதிக்கமுடியாத இந்தியர்; சச்சினுக்கு கவாஸ்கர் பாராட்டு!





கோஹினூர் வைரத்தைவிட டெண்டுல்கர் விலைமதிப்பற்றவர். நம்மிடம் கோஹினூர் வைரம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் சச்சின் உள்ளார். இந்தியர்களில் விலைமதிப்பற்றவர் அவர்தான். 50 சதங்கள் அடிக்கும்வரை டெண்டுல்கர் ஆட்டத்தை நிறுத்தக்கூடாது என கவாஸ்கர் தெரிவித்தார். 34 ஆவது சதத்தை அடித்து சச்சின் தனது சாதனையை சமன் செய்தது குறித்து கவாஸ்கர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேபோல முன்னாள் இந்திய வீரர்களும், பாகிஸ்தான் முன்னாள் வீரர்களும் டெண்டுல்கரைப் பாராட்டியுள்ளனர். அவர்களில் சிலர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு -

*பாலி உம்ரிகர் -*

டெண்டுல்கர், கவாஸ்கர் இருவரும் சிறந்த துடுப்பாட்டவீரர்கள்தான். அவர்களை ஒருவருடன் ஒருவர் ஒப்பிட இயலாது.

ஆனால் டெண்டுல்கரால் மேலும் சதங்கள் அடிக்கமுடியும். அவருக்கு இன்னும் வயது இருக்கிறது.

*வெங்சர்க்கார் -*

கவாஸ்கரின் சாதனையை டெண்டுல்கர் சமன் செய்தது பாராட்டுக்குரியது. கவாஸ்கர் உலகின் தலைசிறந்த வேகப்பந்து வீச்சாளர்களுக்கு எதிராக ஓட்டங்கள் எடுத்துள்ளார். டெண்டுல்கர் உலகின் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளர்களது பந்தை அடித்து ஓட்டங்கள் எடுத்திருக்கிறார்.

## விளையாட்டு

*பிரசன்னா -*

கவாஸ்கர் சாதனையை டெண்டுல்கர் சமன் செய்வார் என்பது எதிர்பார்த்த ஒன்றுதான். காயமடைந்ததால் இது தாமதமானது. டெண்டுல்கர் தொடர்ந்து சதங்கள் அடிக்க வாய்ப்புள்ளது.

*மியான்டட் (பாகிஸ்தான் முன்னாள் கப்டன்)-*

34 சதம் அடிப்பது என்பது சாதாரண விடயமல்ல. கவாஸ்கரின் சாதனையை நீண்ட வருடங்களுக்குப் பின்பு சமன் செய்ததன் மூலம் டெண்டுல்கர் உலகின் தலைசிறந்த துடுப்பாட்டவீரர் என்பதை நிரூபித்திருக்கிறார்.

*வக்கார் யூனுஸ் (பாகிஸ்தான் முன்னாள் கப்டன்)-*

எந்த ஒரு சிறந்த துடுப்பாட்டவீரரும் ஓட்டங்களைக் குவிக்கமுடியும். உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் டெண்டுல்கரும் ஒருவர் என்பதில் சந்தேகமில்லை.

*முஸ்தாக் அகமட் (பாகிஸ்தான் முன்னாள் சுழற்பந்து வீரர்)-*

ஓட்டங்கள் குவிப்பதில் டெண்டுல்கர் திறமையானவர். என்னைப் பொறுத்தவரை அவர் ஒரு சிறந்த துடுப்பாட்டவீரர்தான்.

*சயீத் அன்வர் (பாகிஸ்தான் முன்னாள் தொடக்கவீரர்)-*

டெண்டுல்கர் மேலும் பல்வேறு சாதனைகள் புரிய வாழ்த்துகிறேன். சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் டெண்டுல்கரும் ஒருவர். ஆனால் சிறந்த இந்தியத் துடுப்பாட்டவீரர் கவாஸ்கர்தான் இவ்வாறு அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

## விமர்சனம் செய்தோருக்கு சதமே என்னுடைய பதில்!

### சச்சின் கூறுகிறார்



'கையில் ஏற்பட்ட காயத்துக்குப் பின்னர், அவ்வளவுதான் சச்சினின் ஆட்டம் போய் விட்டதென்று' விமர்சனம் செய்தவர்களுக்கு அளித்த பதிலே இந்தச் சதம் என பங்களாதேஷுடனான ஆட்டத்தில் சதமடித்து கவாஸ்கரின் உலக சாதனையைச் சமப்படுத்திய பின்னர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்தார்.


நேற்றுமுன்தினம் மாலை ஆட்டம் முடிவுற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் -

கையில் ஏற்பட்ட காயம் இன்னும்கூட வலிக்கிறது. என்னால் இன்னும்கூட சில ஷொட்களை அடித்து ஆடமுடியவில்லை. போகப்போக எல்லாம் சரியாகும் என்று நம்புகிறேன்.

கவாஸ்கரின் சாதனையை சமன் செய்ததை பெரும் கௌரவமாகக் கருதுகிறேன். கவாஸ்கர் கொடுத்த அறிவுரையை கட்டாயம் பின்பற்றுவேன்.

வெறும் 40 சதங்களுடன் நிறுத்திக்கொள்ள மாட்டேன். 50 சதம் அடிக்கவேண்டும் என்பது அவரது உத்தரவு. அதனை நோக்கி இனி விளையாடுவேன். எனது இந்தச் சதத்தை மறைந்த எனது தந்தைக்குச் சமர்ப்பணம் செய்கிறேன்.

இவ்வளவு வலியையும் பொறுத்துக் கொண்டு என்னால் ஆடமுடிகிறதென்றால் அதற்கு குடும்பத்தினரின் ஆதரவுதான் காரணம் எனத் தெரிவித்தார்.



# இனிங்ஸ் தோல்வியை நோக்கி பங்களாதேஷ் கிரிக்கெட் அணி!



(டாக்கா)

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழக்காமல் அடித்த 248 ஓட்டங்களின் மூலம் - 526 ஓட்டங்களைக் குவித்து இந்திய அணி இனிங்ஸ் வெற்றி பெறும் நிலையில் உள்ளது.

ஆட்டத்தின் இரண்டாவது நாளான நேற்றுமுன்தினம் இந்திய அணி 7 விக்கெட் இழப்புக்கு 348 ஓட்டங்கள் என்ற நிலையில் இடைநிறுத்தப்பட்ட ஆட்டம் நேற்றுக் காலை தொடர்ந்து இடம்பெற்றது.

சச்சினுடன் இணைந்திருந்த கும்ளே சற்று நேரத்திலேயே ஆட்டமிழந்தார்.

16 பந்துகளில் ஒரேயொரு ஓட்டத்தை மட்டுமே பெற்ற நிலையில் கும்ளேயின் விக்கெட்டை மொர்ராசா வீழ்த்தினார்.

இதன் பின்னர், ஹர்பஜன்சிங் சச்சினுடன் இணைந்தார். ஸ்கோர் 393 ஆக உயர்ந்தபோது ஹர்பஜன் ஆட்டமிழந்தார். 14 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 8 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் அவர் ஆட்டமிழந்தார்.





இதனையடுத்து சகீர்கான் களமிறங்கினார். கடைசி விக்கெட் ஜோடி அபாரமாக ஆடி 133 ஓட்டங்களை சேர்த்து சாதனை படைத்தது. சகீர்கான் 75 ஓட்டங்களைக் குவித்து அஷ்ரபுல் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார்.

இவர் 115 பந்துகளில் 10 பவுண்டரிகள் 2 சிக்சர்களுடன் இந்த ஓட்டங்களைப் பெற்றிருந்தார். கடைசி விக்கெட்டுக்காகக் களமிறங்கி அதிக ஓட்டங்களைக் குவித்தவர் என்ற உலகசாதனையை சகீர்கான் இதன் மூலம் படைத்தார்.

இதற்கு முன்னர் 1972/ 73 இல் நியூசிலாந்து வீரர் கொளஞ் பாகிஸ்தான் அணிக்கு எதிராக ஒக்லாந்தில் எடுத்த 68 ஓட்டங்களே கடைசி விக்கெட்டுக்காக ஒரு அணியின் 10 ஆவது வீரர் அடித்த அதிகூடிய ஓட்டங்களாக இருந்தது.

இந்திய அணி 526 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்ததையடுத்து 342 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

சச்சின் டெண்டுல்கர் ஆட்டமிழக்காமல் 248 ஓட்டங்களைப் பெற்றார். 379 பந்துகளில் 35 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களை டெண்டுல்கர் குவித்தமை குறிப்பிடத்தக்கது.

டெஸ்ட் போட்டிகளில் சச்சின் டெண்டுல்கர் அடித்த அதிகூடிய ஓட்டங்கள் இதுவாகும்.

பாஸ்யா, மொர்ராசா, ரபீக், ரஹ்மான் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் அஷ்ரபுல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதையடுத்து பங்களாதேஷ் அணி இரண்டாவது இனிங்சில் தொடர்ந்து ஆட்டத்தை ஆரம்பித்தது. 4 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதல் விக்கெட்டை இழந்த பங்களாதேஷ் 24 ஓட்டங்களைப் பெற்றநிலையில் அடுத்தடுத்து 3 விக்கெட்டுக்களை இழந்தது. அதையடுத்து ஸ்கோர் 36 ஆக உயர்ந்தபோது அடுத்த விக்கெட்டும் வீழ்த்தப்பட்டது. முதல் 5 விக்கெட்டுக்களையும் இர்பான் பதான் கைப்பற்றினர்.

நேற்றைய ஆட்டம் நிறைவுபெற்றபோது பங்களாதேஷ் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பங்களாதேஷ் அணி சார்பில் நபீஸ் இக்பால் 54 ஓட்டங்களையும் இஸ்லாம் ரானா ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களையும் பாஷ்யா ஆட்டமிழக்காமல் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பதான் 5, கும்ளே 2, ஹர்பஜன் 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

பங்களாதேஷ் அணி வசம் மேலும் இரண்டு விக்கெட்டுக்களே உள்ளநிலையில் இனிங்ஸ் தோல்வியைத் தடுக்க 172 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் அது உள்ளது குறிப்பிடத்தக்கது.

# பயிற்சி ஆட்டத்தில் இங்கிலாந்து திணறல்!





தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இங்கிலாந்து கிரிக்கெட் அணி நேற்றுமுன்தினம் ஆரம்பமான பயிற்சி ஆட்டத்தின் முதல் இனிங்ஸில் 225 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தென்னாபிரிக்க 'ஏ' அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று இங்கிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதன்படி ட்ரெஸ்கொதிக் 7 ஓட்டங்களையும், ஸ்ரரஸ் 50 ஓட்டங்களையும், புச்சர் 3 ஓட்டங்களையும், வோகன் 26 ஓட்டங்களையும், தோர்ப் ஓட்டம் எதனையும் பெறாமலும், பிளின்ரொப் 4 ஓட்டங்களையும், ஜோன்ஸ் 41 ஓட்டங்களையும், கைல்ஸ் 22 ஓட்டங்களையும், ஹோகாட் 17 ஓட்டங்களையும் ஹர்மிசன் 7 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஜோன்ஸ் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், 58.1 ஓவர்களிலேயே இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 225 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க 'ஏ' அணியைச் சேர்ந்த லங்கவெல்ட் 5 விக்கெட்டுக்களையும், பகலாதி மற்றும் மோர்க்கெல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் விலோபி 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து துடுப்பெடுத்தாட ஆரம்பித்த தென்னாபிரிக்க 'ஏ' அணி 34 ஓவர்களுக்குள் 2 விக்கெட் இழப்புக்கு 144 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. புடிக் -4, ஒன்ரொங் - 56 ஓட்டங்களையும் ஜார்ஸ் வெல்ட் -59, பிரின்ஸ் - 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலிருந்தனர்.

# பயிற்சி ஆட்டத்தில் பாகிஸ்தான் படுதோல்வி!



அவுஸ்ரேலியாவுக்குச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் பாகிஸ்தான் அணி - பேர்த் மைதானத்தில் நடைபெற்ற மேற்கு அவுஸ்ரேலிய அணியுடனான பயிற்சி ஆட்டத்தில் 10 விக்கெட்டுக்களால் தோல்வியடைந்தது.

நான்குநாள் பயிற்சி ஆட்டத்தில் மூன்றாவது நாளான நேற்றுமுன்தினமே பாகிஸ்தான் அணி படுதோல்வி கண்டது. அவுஸ்ரேலிய அணியுடனான டெஸ்ட் போட்டிக்கு தயாராகிவரும் பாகிஸ்தான் அணிக்கு அந்தத் தோல்வி பெரும் உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 262 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்த நிலையில் மேற்கு அவுஸ்ரேலிய அணி முதல் இனிங்ஸில் விளையாடி 9 விக்கெட் இழப்புக்கு 404 ஓட்டங்களைப் பெற்றநிலையில் டிக்ளேர் செய்திருந்தது.

இதன்பின்னர் விளையாடிய பாகிஸ்தான் அணி 174 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால் நேற்று இரண்டாவது இனிங்ஸில் எந்த விக்கெட்டையும் இழக்காமல் 34 ஓட்டங்களைப் பெற்றதன்மூலம் - மேற்கு அவுஸ்ரேலிய அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

# மனிதனின் அடிப்படை உரிமைகள் பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வம் வேண்டும்

## மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை அதிகாரி

ஒவ்வோர் மனிதனும் வாழ்க்கையில் முன்னேறவேண்டுமானால், அவனுக்குரிய உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும். இன்று மனித உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்படாத காரணத்தால், வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் அகதிகள் அந்தஸ்தான வாழ்க்கையை எம்மவர் எதிர்நோக்கவேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மனித உரிமைகள் பற்றித் திட்டமிடல் வேண்டும். சிந்திக்க வேண்டும். சிந்தித்துச் செயலாற்றினால், மனிதனின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படும் என, யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அலுவலர் ஜனாப் பெரஸ் தெரிவித்தார்.

மனித உரிமைகள்தினப் பிரகடனத்தை முன்னிட்டு, வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் கடந்த 10 ஆம் திகதியன்று நடைபெற்ற விழிப்புணர்வுக் கருத்தரங்கில் சிறப்புப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து ஒவ்வொரு மனிதனும் வாழ்வதற்கு உணவு, உடை, உறைவிடம்தான் அவசியம். தேவையான அடிப்படை உரிமைகள் என்று பாலர் வகுப்பில் கற்ற பாடத்தைக் கிளிப்பிள்ளைபோல் இன்றுவரை நாம் சொல்லிவருகின்றோம். அதற்கப்பால் வருமானம், வேலைவாய்ப்பு, திருமணம், சுதந்திரம், தனிமனிதன் அந்தஸ்து போன்ற காரணங்களும், மனிதனின் அடிப்படை உரிமைகளுக்குள் அடங்குகின்றன என்பதை எவருமே சிந்தித்துப் பார்ப்பதில்லை.

சிந்திக்கவேண்டும், தன்னைப் பற்றிச் சிந்திக்கவேண்டும், பிறரைப்பற்றிச் சிந்திக்கவேண்டும், வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். இப்படியான சிந்தனைக்காகவே ஒரு வருடத்துக்கு ஒருமுறை இப்படியான நிகழ்வுகள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருகிறோம். சிந்தனைகளை, திட்டமிடலை ஒவ்வொரு தனி மனிதனும் தமக்குள்ளே ஏற்படுத்திக்கொள்வதற்காக ஒரு வருடகால தவணை வருடந்தோறும் அவகாசம் வழங்கப்படுகிறது. தன் சிந்தனையை, திட்டமிடலைச் சரியான முறையிலே நடைமுறைப்படுத்த இந்தக் கால அவகாசம் அவனுக்குச் சந்தர்ப்பத்தை வழங்குகிறது.

எங்கள் கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டுமாயின், மற்றையவர்களின் கௌரவத்தையும் நாம் பாதுகாத்துக் கொள்ளத் தக்கவாறு நடக்கவேண்டும். அப்படி நடக்கும் சந்தர்ப்பத்தில்தான் மனித உரிமைகள் உருவாகிறது. மனிதனின் மனதிலேதான் மனித உரிமைகள் உருவாகவேண்டும். மனித உரிமைகள் ஆணைக்குழுவால் எத்தனையோ பிரயோசனங்களை மக்கள் பெற்றுக் கொள்ளலாம். ஆனால், எவரும் அதைப் பற்றிச் சிந்திப்பதில்லை. இதுபற்றிய விழிப்புணர்வு இல்லை. நீங்கள் அரச ஊழியர்களாக இருக்கின்றீர்கள். உங்களுக்கு உங்கள் உரிமைகள் ஏதோவொரு விதத்தில் குறிப்பாக உயர் அதிகாரிகளினாலோ அல்லது வேறு எந்தவிதத்திலுமோ ஏற்படலாம். அப்படி உங்கள் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது, அதனால் நீங்கள் பாதிக்கப்படும்போது அதுபற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஆதாரபூர்வமாக அறிவிக்கும் பட்சத்தில், அவற்றைத் தகுந்த முறையில் தீர்த்துவைக்கும் பொறுப்பும், அதிகாரமும் இந்த ஆணைக்குழுவுக்கு உண்டு.

பொலிஸ் நிலையங்களிலோ அல்லது வேறு தடுப்பு முகாம்களிலோ ஒரு மனிதன் தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதைக்குள்ளாகியோ அல்லது வேறு விதத்திலோ அவன் தனது அடிப்படை உரிமைகளை இழக்கும் சந்தர்ப்பம் ஏற்படுமாயின், அவனுக்காகக் குரல்கொடுத்து அவனுடைய உரிமையை நிலைநாட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரமும் இந்த ஆணைக்குழுவுக்கு உண்டு.

மனித உரிமைகள் ஆணைக்குழு மட்டுமல்ல பொலிஸ் ஆணைக்குழு, பொதுச்சேவை ஆணைக்குழு, ஒம்புட்ஸ்மன் எனப் பலவிதமான சட்டரீதியான குழுக்கள் எதுவாயினும், அவை பற்றியறியாதவர்களாகவே எம் மக்கள் இருந்து வருகிறார்கள்.

இவை ஏன் இருக்கின்றன? என்ன செய்கின்றன? என்பதை ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். இப்படி இவற்றை அறிந்துகொள்ளும் சந்தர்ப்பங்களில் ஒன்றாகவே - இன்று இந்த மனித உரிமைகள் ஆணைக்குழு சம்பந்தமாகத் தெரிவித்ததாகக் கூறினார்.

வலிமேற்கு உதவிப் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் செயலக நிர்வாக உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர் ஆகியோரும் உரையாற்றினர். கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், செயலக ஊழியர்கள் என அநேகமானோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (48)

## நெடுந்தீவு கரையோரப்பகுதி கடலரிப்புக்கு உட்படும் அபாயம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேசத்தின் வடகடலோரப் பகுதி கொஞ்சம் கொஞ்சமாகக் கடலரிப்புக்கு உட்பட்டு வருகின்றமையால், அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது வீசும் வாடைக்காற்றால், வடகடலோரம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. கடற்தொழிலை நம்பி வாழும் சுமார் 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்தக் கரையோரமாகவே வசித்து வருகின்றன. இவர்களது வீடுகளின் வாசல்வரை கடற்கொந்தளிப்பால் ஏற்பட்டுக் கரையொதுங்கும் அலைகள் சென்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கரையோரத்தை அண்டிவாழும் மக்கள் தமக்கொரு கரையோரப்பாதை இல்லாமையால், களிமண் காணிகளூடாகப் பயணிக்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.



கடந்த 10 வருடகால அபிவிருத்தியின்போது இந்தக் கரையோரப் பகுதியைக் கடலரிப்பிலிருந்து தடுக்க, கல் அணைகள் போடப்பட்டபோதும், அந்த அணைகள் பயனற்றதாகப் போய்விட்ட நிலையில் தற்போது அந்தப் பகுதி மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை நடத்துவதில் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

நெடுந்தீவினுடைய நிலப்பரப்புக் குறைவடைவதையும், இதேவேளை கரையோர மக்களின் தொழில்வள நிலைமையையும் கருத்திற்கொண்டு, ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

## துர்நடத்தையில் ஈடுபட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய விடுதியில் தங்கியிருந்து துர்நடத்தையில் ஈடுபட்ட இளைஞனும், யுவதியும் அந்த விடுதியின் இரவுக் காவலாளிகளால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு, ஆலய நிறைவேற்று உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களை விசாரணை செய்த நிறைவேற்று உத்தியோகத்தர் சம்பவத்தை உறுதி செய்த பின்னர், ஊர்காவற்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

பொலிஸார் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் இருவரையும் ஆஜர் செய்தனர். இளைஞர் சார்பில் ஆஜரான சட்டத்தரணியால் செய்யப்பட்ட பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு, இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## மாட்டீன் வீதியில் கொட்டப்படும் கழிவுகளால் துர்நாற்றம்

மாட்டீன் வீதியும், வேம்படி வீதியும் இணையும் திருக்குடும்ப கன்னியரமடச் சந்தி கழிவுகள் கொட்டும் இடமாக மாறி வருகிறது. இதனால் இந்த வீதியால் பயணம் செய்யமுடியாத அளவுக்குத் துர்நாற்றம் வீசுகிறது.

இந்த வீதியில் வசிப்பவர்களே அந்த இடத்தில் கழிவுகளைப் போடுவதால், வீதியின் பெரும்பகுதி கழிவுகளால் நிறைந்து போக்குவரத்துக்குப் பெரும் சிரமமாகவுள்ளது.

இந்தக் கழிவுகளை உண்ண வரும் கட்டாக்காலி நாய்களால் விபத்துக்கள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்த அந்தப் பகுதி இளைஞர்கள் - தாம் பல முயற்சிகள் மேற்கொண்டும் இதில் கழிவுகளைக் கொட்டுபவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லையெனவும் சம்பந்தப்பட்டவர்களே இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமெனவும் தெரிவித்தனர். (91)

## சுவீடன் நாட்டின் தூதுவர் சாவகச்சேரிக்கு விஜயம்



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதியை சுவீடன் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் பெனடி னோறெகனோசியும், அவரது பாரியாரும் நேற்று முன்தினம் திறந்து வைத்தனர்.

யாழ்குடாநாட்டுக்கு உத்தி யோகபூர்வமாக விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த சுவீடன் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் தென்மராட்சிக்கு விஜயம் செய்திருந்தார்.

சுவீடன் நாட்டின் நிதியுதவியுடன் புதிதாக அமைக்கப்பட்டிருநத செயற்பாட்டறையை, சுவீடன் நாட்டின் தூதுவர் திறந்து வைத்தார்.

தொடர்ந்து அவரது பாரியார் அலுவலகக் கட்டடத்தொகுதியைத் திறந்து வைத்தார்.

பாடசாலைக்கான விளையாட்டு மைதானத்தைத் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா ஆகியோரும் திறந்துவைத்தனர்.

இந்த நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (29)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஆறாவது அகவையில்



பெயர்:- வி.ரத்தா
விலாசம்:- 601/3 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :-
முகவரி :
பிறந்த ஆண்டு:-

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

## வீதி தடையால் மழைநீர் தேக்கம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கூவில் தீப ஜோதி சனசமூக நிலையத்துக்கு முன்பாகவுள்ள கோயில் வீதியில் வெள்ளம் வழிந்தோடுவதற்காக விடப்பட்ட பாதையைத் தடுத்து, சிலர் மணலால் தடைபோட்டுள்ளனர்.

இதனால் அந்தவீதி நீரில் மூழ்கிக் குளம்போல் காட்சியளிக்கிறது. இந்தப் பாதையூடாகப் பயணம் செய்வோர் பெரும் சிரமமடைந்து வருகின்றனர் (20)

## வெள்ளவாய்க்கால் புனரமைப்பு

நவாலி வேலக்கை பிள்ளையார் குளம் புனரமைப்பும், சென். பீற்றர் வீதி வெள்ள வாய்க்கால் புனரமைப்பும் கடந்த மூன்று தினங்களாக இடம் பெற்று வருகின்றன.

இவை நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமையால் வீதிகளிலும், வீடுகளிலும் மழை வெள்ளம் தேங்கியுள்ளது.

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை மேற்கொண்ட புனரமைப்புப் பணிகளால் தேங்கியுள்ள மழை வெள்ளம் வழிந்தோடி யுள்ளதாகப் பிரதேச சபையினர் தெரிவித்தனர். (91)

## அபிவிருத்தி சங்க நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு அதிபர் க.இராஜதுரை தலைமையில் கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் கடந்த 10 ஆம் திகதியன்று நடைபெற்றது.

இதில் நடப்பு வருட நிர்வாகத் தலைவராக அதிபர் க.இராஜதுரையும், செயலாளராக எஸ். இருதயராசா, உபசெயலாளராக எஸ். பற்குணராசா, பொருளாளராக இ.பிரபாகரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.


## திருவெம்பாவை தினம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி கல்வயல் அருள்மிகு வேதவனப் பிள்ளையார் ஆலயத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி திருவெம்பாவை தினத்தன்று - முதல் 10 நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறும். தொடர்ந்து 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (24)




# கலியாணம் கட்டாத பொண்டாட்டி!




ஸ்ரீரங்கன்

கற்பனையில் கூட அவரை பாரிஸ் நகர வீதியில் சந்திப்பேன் என்று நினைத்ததில்லை.

ஆனால், நான் அவரைச் சந்தித்தேன். என்னைப் பார்த்ததில் அவருக்கும் எதிர்பாராத அதிர்ச்சி! மகிழ்ச்சி!

குழந்தைக்கு விளையாட்டுச் சாமான்கள் சிலவற்றை கைகளில் ஏந்தி நின்றார் அவர். பாரிஸ் ... சப்பல் வீதியின் குறுக்கே எதிர்த்திசையில் நின்ற மோட்டார்காரை நோக்கி அவர் செல்வதற்கு முற்பட்டுக்கொண்டிருந்தார்.

அவர்தானா என்ற சந்தேகம் எனக்கு. "மிஸ்ரர் வேலாயுதம்" என்று குரல கொடுத்தேன்.

வீதியைக் கடக்க முற்பட்டவர் எனது குரல் கேட்டு நின்று திரும்பிப் பார்த்தார்.

அவர் வேலாயுதம் தான்! நான் உறுதிசெய்து கொண்டேன். அவரை நோக்கி இரண்டடி வைத்தேன். அவரும் என்னை நோக்கிவந்தார்.

"நீங்களும் இங்கேயா?" என்று அவர் என்னைப் பார்த்துக் கேட்டார். அவர் சிறிதுகாலமாக இங்கேதானிருக்கிறார் என்பது அவரது கேள்வியில் தொனித்தது!

அவரின் கேள்விக்குப் பதில் சொல்லாமலே என்ன கைகளில் பேரப் பிள்ளைக்கு விளையாட்டுச் சாமான்களோ? என்று கேட்டேன்.

"ஓமோம். என்ரை மூத்த மகனுக்குப் பொடியன் பிறந்து நாளைக்கு முதலாவது பிறந்தநாள்" என்று வேலாயுதம் பதில் சொன்னார்.

"அப்போ மேல் நாட்டு மருமகள் பெற்றெடுத்த மேல் நாட்டுப் பேரனுக்கு. மேல் நாட்டு விளையாட்டுச் சாமான்களுடன் யாழ்ப்பாணத் தாத்தா விளையாட்டுக் காட்டி விளையாடப்போகிறார் என்று சொல்லுங்கோ" என்று நான் கிண்டலடித்தேன்.

"அப்பிடியொன்றுமில்லை" என்று சிரிப்போடு சொன்ன நண்பர், "உங்களுக்கு விஷயம் தெரியாதோ?"என்று தொடர்ந்தார்.

"என்ன விஷயம்? என்றேன். "அவன் இப்போ தமிழ்ப் பெட்டையை அல்லோ கட்டியிருக்கிறான்" என்றார்.

"இது எப்போது. எங்கை கலியாணம் செய்தவன்?" என்றேன்.

அவன் தனக்குப் பிற்காலத்தில் தன்னைக் கவனித்துப் பார்ப்பதற்கு யாரும் இருக்கமாட்டாங்கள். தமிழ்ப் பிள்ளையைக் கலியாணம் செய்தால்தான் தன்னைப் பார்ப்பாள" என்று கடிதங்களும் எழுதி. போனிலும் பேசி நச்சரித்தான்.

மனுஷியும் கரைச்சல் கொடுத்தாள். ஒரு புறோக்கரிட்டச் சொன்னம். அவனுக்கும் நல்லா வயது போயிற்றுது. நாற்பதுக்கு மேல். இவன்ரை வயதுக்குத் தோதான ஒரு பெட்டையை புறோக்கர் பார்த்துப் பிடித்தார். கட்டிவைச்சம். நல்ல பெட்டை என்று வேலாயுதமும் சொன்னார்.

அவர் இந்தக் கதையைச் சொல்லிக்கொண்டிருந்தபோது. எனது மனக் கண்முன் கொழும்புக்கு சில வருடங்களுக்கு முன் வந்திருந்த அந்தப் பிரஞ்சுப் பெட்டையின் முகம்தான் காட்சியளித்தது.!

வேலாயுதம் ஏதோவெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார். அவை என்காதில் விழவில்லை.

வெள்ளைக் காரருக்குரிய வெள்ளைத் தோல் தான் அவளுக்கும். ஆனாலும் கழுத்து நரம்புகளூடாக இரத்தம் ஓடுவது தெரிவது போன்று தோன்றும். அவள் முகமும் செஞ்சந்தணம் பூசியது போன்று மினுங்கும்! அவள் சிரித்தால் சூரியனைக் கண்டு விரியும் செந்தாமரை மலர் போல் தான் ஒளி வீசும்!

பிரஞ்சுக்காரிதான் ஆயினும் ஆங்கிலமும் சரளமாகப் பேசுவாள். கொழும்புக்கு வந்திருந்த சமயத்தில் இரண்டொரு தமிழ் வார்த்தைகளும் பேசப் பழகிக்கொண்டாள். "வணக்கம். வாங்க" நான் டோசை சுடப்போறன் என்பவை அவள் பழகிப் பேசிக்காட்டிய தமிழ் வார்த்தைகள். பேசியது மட்டுமல்ல, கோதுமை மாவில் 'டோசை'யும் சுட்டுப் பார்த்தாள். கையையும் சுட்டுக்கொண்டாள்! அவள் வாழ்க்கையைப்போல்!

இந்தப் பிரஞ்சுப் பெட்டையைத்தான் நண்பர் வேலாயுதத்தின் மூத்த மகன் கொழும்புக்குக் கூட்டி வந்திருந்தான். அவளுடைய அழகும் எல்லோருடனும் கலகலப்பாகப் பழகும் அவளது குணமும் வேலாயுதம் தம்பதியருக்கு மட்டுமல்ல அவர்கள் குடியிருந்த "லைன்" வீடுகளில் வசித்த கொழும்புக் குடும்பங்களுக்குகூட நன்கு பிடித்துவிட்டது. நாங்களும் அந்த வீடுகளில் ஒன்றில் தற்காலிகமாகக் குடியிருந்தோம். எங்கள் வீட்டிலும் அவள் குசினிவரை வந்து பழகினாள். சில நாட்கள்தான் அவள் அங்கு தங்கியிருந்தாள் எல்லோருக்கும் அவளைப் பிடித்துக் கொண்டது!

வேலாயுதத்தின் மூத்த மகன் பெயர் ரவிகாந்தன். அவனும் அழகான தோற்றமுடையவன். "கலியாணம் செய்து எத்தனை வருடங்கள்?" என்று கொழும்புக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் விசாரித்தனர். பிள்ளைகள் இல்லையா. இவர்களுக்கு ஒரு பிள்ளை பிறந்தால் எவ்வளவு அழகாயிருக்கும் என்றும் அந்தப் பெண்கள் அங்கலாய்த்தனர்.

ரவிகாந்தன் தனது வெள்ளைக்கார மனைவியைக் கூட்டிக்கொண்டு பிரான்சுக்குத் திரும்பி விட்டான். நாங்களும் அந்தக் குடியிருப்பை விட்டு வெளியேறி ஊர் திரும்பிவிட்டோம். வேலாயுதம் குடும்பத்துடன் மட்டுமன்றி. அக் குடியிருப்பிலிருந்த எவருடனும் எமது தொடர்பு நீடிக்கவில்லை. எனது ஒரு மகன் பாரிசிலிருக்கிறான். அவனது தாயார் அதாவது எனது மனைவி இவ்வுலகைவிட்டுப் பிரிந்த பின் மேற்குலகைப் பார்க்க வாருங்கள் என்று அவன் என்னை அழைத்துக்கொண்டிருந்தான். அவன் ஆசையை நிறைவேற்றவும் பாரிசையும் ஒரு முறை பார்த்துவிடுவோமே என்ற எனது நப்பாசையும் என்னை இங்கு கொண்டு வந்துவிட்டது.

பாரிசில் "லா சப்பல்" என்ற பகுதியை ஈழத் தமிழர்களே பெரும்பாலும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள்!

இங்குள்ள கடைகளில் யாழ்ப்பாணத்து முருங்கைக்காய். கறுத்தக் கொழும்பான். செம்பாட்டான் முதலிய மாம்பழங்கள். கீரைகள் யாவும் "உடன்" பொருட்களாக வாங்கலாம். சுத்தமான ஆட்டுக்கிடாய் யாழ்ப்பாணத்தைப் போல பங்கு இறைச்சியாகவும் இங்கு கிடைக்கும். சாப்பாட்டுக் கடைகளிலும் கொழும்பில் செக்கடித் தெருவில் கிடைப்பது போனறு சாப்பிடலாம். இந்த "லாச்சப்பலில்" யாழ்ப்பாணத் தாரையும் மட்டக்களப்பாரையும் ஒன்றாகச் சந்திக்கவும் முடியும்.

இந்த இடத்தில்தான் நான் நண்பர் வேலாயுதத்தைச் சந்தித்தேன். மகன் ரவிகாந்தனுக்குத் திருமணம் செய்துவைத்த கதையை அவர் சொன்னதும். அப்ப. கொழும்புக்கு அவன் கூட்டிக்கொண்டுவந்த வெள்ளைக்காரப் பெண் எங்கே? என்று கேட்டேன்.

"இதென்ன கேள்வி?" என்று சிரித்தபடியே சொன்ன வேலாயுதம். இது இங்க சர்வ சாதாரணம். அவன் அவளை விடாமலிருந்தால் இன்னும் கொஞ்ச நாளையில அவள் விட்டிட்டுப் போயிருப்பாள். எங்கட குடும்பங்களைப் போல அவளுகள் சாகும்வரை ஒருத்தனோடையே இருக்கிறவளுகளா? சேர்ந்திருப்பாளுகள் பிடிக்கவில்லையென்றால் விட்டிட்டுப் போய் இன்னொருத்தனைப் பிடிப்பாளுகள்" என்று சொல்லிமுடித்தார்.

"ரவிகாந்தன் விஷயத்தில் அவள் பிரிந்துபோகவில்லைப் போலிருக்கிறதே" என்றேன்.

இதற்கு அவர் பதில் சொல்லாமலே. நேரமாகுது. தம்பி காருக்குள்ள காத்துக்கொண்டிருக்கிறான். நீங்கள் கட்டாயம் நாளைக்கு வரவேண்டும். வழியில். கண்ட இடத்தில சொல்றன் எண்டு நினைக்கக் கூடாது. எப்பிடியும் தம்பி வந்து உங்களையும் உங்கள் மகன் வீட்டாரையும் கூப்பிடுவான். நீங்கள் மறுக்காமல் வந்திடுங்கோ என்று சொல்லியபடியே நடந்தார்.

ரவிகாந்தனின் மகன் பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கு நானும் போனேன். அவர்களின் உறவினர் நண்பர்கள் என்று நிறையப்பேர் வந்திருந்தார்கள். நான் அவர்களுடைய வரவேற்பறையின் ஒரு மூலையில் அமைதியாக அமர்ந்திருந்தேன்.

மாலையில் முன்வாசலால் புகுந்த அந்தப் பிரஞ்சுப்பெண் வழக்கமான புன்சிரிப்புடன் நடந்துவந்து அங்கு நின்றவர்களுக்கு வணக்கம் சொல்லி கைகுலுக்கினாள். ரவிகாந்தனுக்கும் மனைவிக்கும் கைகொடுத்தாள். பின்னர் பிறந்தநாள் கொண்டாடும் அந்த ஒரு வயதுக்குழந்தையின் அருகே சென்று அதன் கையைப் பிடித்துக்குலுக்கினாள். குழந்தையின் கன்னத்தில் முத்தமிட்டாள். கைப்பையை திறந்து எதையோ எடுத்து. குழந்தையின் கைகளில் கொடுத்தாள். ரவிகாந்தனும் மனைவியும் குழந்தையைப் பார்த்து அன்ரிக்கு டாங்ஸ் சொல்லுங்கோ தம்பி. "மெஸி" சொல்லுங்கோ ராசா என்று கேட்டுக்கொண்டிருந்தனர்.

அன்ரி டாங்யு. "மெஸி" என்று சொல்லிக்கொண்டு குழந்தை துள்ளிக் கொண்டோடியது.

அந்தப் பிரஞ்சுப் பெண் வரவேற்பறையை நோட்டமிட்டாள் நான் அவள் கண்ணில்பட்டதும். "ஹல்லோ" என்று கூறியபடியே என்னிடம் வந்து கைகுலுக்கினாள். அருகேயிருந்த ஆசனத்தைக் காட்டினேன் அமர்ந்தாள். நலம் விசாரித்தாள். நானும் அவள் நலம் பற்றிக்கேட்டேன்.

"நன்றாக இருக்கிறேன் நீங்கள் எப்போது பாரிசுக்கு வந்தீர்கள்?" என்று கேட்டாள். நான் வந்து ஒருவாரம் ஆகின்றது என்றேன்.

"நீ மறுமணம் செய்யவில்லையா?" என்று எடுத்த எடுப்பிலேயே நான் கேட்டுவிட்டேன்.

அவள் முகத்திலிருந்த அவளது புன்னகை கணப்பொழுதில் மறைந்துவிட்டது. ஆனால் கோபிக்கவில்லை! மீண்டும் வலிந்து புன்னகைத்து அவள் முதலில் செய்த அதேதவறை மீண்டும் செய்யவிரும்பவில்லை என்றாள்.

"உங்கள் ஆட்களுக்குத்தான் திருமணமும் மணமுறிவும் பெரிய பிரச்சினையே இல்லையே" என்றேன்.

அவளுடைய சிவந்த முகம் தீப்பிழம்பு மாதிரி ஒருகணம் மாறியது. மறு வினாடி செயற்கையாக ஒரு புன்னகையை வெளிக்காட்டினாள் பின் என்னைப்பார்த்து நீங்கள் சொல்வது சரியாக விளங்கவில்லையே! என்றாள்.

அவள் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்கள். சினம். கோபம். ஆத்திரம். அவற்றை அடக்கிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு அவள் பட்ட அவஸ்தை!

இவை அவள் மீது எனக்கு ஒரு விதஅச்சத்தையும். அனுதாபத்தையும் ஏற்படுத்தியது.

"இல்லை நீங்கள் மணம்செய்து கொண்டபின் அற்பவிசயத்திற்குக்கூட கணவனை விட்டுப் பிரிந்துவிடுவீர்களாம். புருசன் குறட்டை விட்டுத் தூங்கினால்கூட அது தொல்லையாக இருப்பதாகச் சொல்லி விவாகரத்துச் செய்துகொள்வீர்களாம் என்று சொல்லிக்கொண்டிருக்கையில் மீண்டும் அவள் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களைக் கவனித்தேன். இப்படி நமது ஆட்கள்பேசிக்கொள்கிறார்கள் என்று சமாளித்து முடித்தேன்.

சிறிது நேரம் மௌனமாக இருந்த அவள் உங்களுக்கு எப்படி விளக்கிச் சொல்வது என்று தான் யோசிக்கின்றேன் என்றாள். இங்கு வந்த அதாவது ஐரோப்பிய நாடுகளுக்கு. அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து. ஆஸ்ரேலியா போன்ற நாடுகளிலும் குடியேறிய உங்கள் தமிழர்கள் சிலர் - பலர் - என்றுகூடச் சொல்லலாம் அங்குள்ள அந்த நாட்டுப்பெண்களை மணம் முடித்திருக்கிறார்கள். இவர்களில் சட்டப்படி பதிவுத்திருமணம் செய்துள்ளவர்கள் எத்தனைபேர். எனக்குத் தெரிந்து ரஷ்ய. சீனப்பெண்களைக்கூட உங்களில் சிலர் மணம் செய்திருக்கிறார்கள்.அவர்கள் இன்னும் ஒற்றுமையாக குடும்பம் நடத்துகின்றார்கள். என்னைப்போல் பிரஞ்சுப் பெண்கள் சிலர் எனக்குத் தெரிந்த அளவில்இங்கேயே ஒற்றுமையாக தமிழ்க் கணவன் மார்களுடன் வாழ்கின்றார்கள். என்று அவள் ஒரு நெடு மூச்சுடன் சொன்னாள்.

"நீ ஏன் அப்படி வாழமுடியாமல் போனது?" என்று நான்கேட்டேன்.

"இது நீங்கள் ரவியிடம் கேட்கவேண்டிய கேள்வி?" என்று பதிலளித்தாள். எனக்கு இது தெரிந்திருந்தாலும் அவள் நிலையைத் தெரிந்து கொள்ளவே அந்தக் கேள்வியை நான் கேட்டேன்.

"நான் ரவிக்கு கெடுதலோ துரோகமோ செய்யவில்லை" என்று அவளே தொடர்ந்தாள். ரவியை நான். உண்மையாக. உயிருக்குயிராய் காதலித்தேன். என்று சொன்னவள் எனது பெற்றோரும் சகோதரர்களும் எங்கள் உறவை எதிர்த்தனர். புத்திமதியும் சொன்னார்கள் அவற்றையெல்லாம் நான் காதில்போட்டுக்கொள்ளவில்லை. இப்பொழுதுதான் எனக்குப் புரிகிறது. இது தான் காதலோ?" என்றும் அவள் சொன்னாள்.

"உங்கள் குடும்பத்தவர்களும் உங்கள் காதல் கல்யாண விசயத்தில் தலையிடுவார்களா?" என்று கேட்டேன். ஏன் இல்லை? ஆனால்உங்களைப் போல திசைதிருப்பி இடையூறு செய்யமாட்டார்கள். புத்தி சொல்லுவார்கள். எங்கள் விருப்பத்திற்கு எதுவானாலும் விட்டுவிடுவார்கள்" என்றாள்.

"இனி உனது எதிர்காலத் திட்டம் என்ன?" என்றேன்.

"காலம் பதில்சொல்லும் இதேதவறை மீண்டும் நான் செய்யமாட்டேன். உங்கள் பெண்கள் சிலர் செய்வதுபோல நாங்கள் செய்யமாட்டோம்" என்று மேலும் சொன்னாள்.

"எதைவைத்து இப்படிச்சொல்கிறாய்?" என்றேன்.

"எத்தனையோ சம்பவங்களை எனக்கு ரவியே சொல்லியிருக்கிறார்" என்று அவள் சொல்லவும்.

"அது தானே பார்த்தேன் 'அந்த' நேரத்தில் அவர்கள் தங்களுக்குத் தெரிந்த 'ஊர்க்கதைகளை' ஊரார்பற்றிய அந்தரங்கக்கதைகளையெல்லாம் உளறிவிடுவார்கள். பெண்கள் தங்களுடையதை 'மூடிமறைத்து' மற்றவர் கதைகளை பெரிதாக்கிவிடுவார்கள்" என்றேன்.

அவள் மீண்டும் சிரித்தாள் அது என்னைக் கேலி செய்வதுபோல இருந்தது.

"சமீபத்தில் நடந்த ஒரு சம்பவம் இது ரவி சொன்னதல்ல. எங்கள் அலுவலகத்தில் பணிபுரியும் உங்கள் ஊர்க்காரன் ஒருவன் பெற்ற அனுபவம் சொல்லட்டுமா?" என்றாள் புன்னகைத்தபடியே.

"எங்கள் பெடியனுடன் சேர்ந்து எங்கள் பழக்க வழக்கங்கள், எங்கடையாட்கள் பேசும் ஊர்க்கதைகள் எல்லாவற்றையும் நீரும் பழகிவிட்டீர்" என்று நான் இடையில் குறுக்கிட்டேன் "நீங்கள் பேசாமலிருந்தால் தான் நான் அந்தக்கதையைச் சொல்லமுடியும்" என்று தொடர்ந்தாள்.

"என்னுடன் எங்கள் தொழிற்சாலை அலுவலகத்தில் சுரேஸ் என்று ஒருவர் வேலைசெய்தார். அவர் உங்கள் நாட்டுக்காரர்தான் என்று அவள் சொல்லவந்த அந்தக்கதையை தொடர்ந்தாள். சுரேஷ் தன் சொந்தக் கதைகளை மாலையில் வேலைமுடிந்து செல்லும் போது. சிற்றுண்டிச்சாலையில் நாங்கள் சிலசமயங்களில் பீர் அல்லது ரீ குடிக்கும்போது சொல்வார். அவர் தனது 17 வயதில் ஒரு இளம்பெண்ணைக் காதலித்தாராம். அந்தக்காதல் பெற்றோர்களின் தடையால் நிறைவேறாமல்போய்விட்டதாம் இதனால் திருமணமே செய்துகொள்வதில்லை என்று இருந்துவிட்டாராம். இப்போது அவருக்கு 35 வயது முடிந்துவிட்டதாம்.

'ஏன் அவனுக்கு உன்மீது இப்போது காதல் பிறந்திருக்கிறது என்று சொன்னாரா' என்று நான் இடைமறித்துக் கேட்டேன்.

கொஞ்சம்பொறுங்கள் அவசரப்பட்டு நீங்களாக கதையை முடித்துவிடாதீர்கள் என்று சொன்னவள் தொடர்ந்தாள்.

ஒருநாள் தனது மணிப்பேசிலிருந்து ஒரு அழகிய இளம்பெண்ணின் புகைப்படத்தை எடுத்து சுரேஸ் காண்பித்தார்.எப்படி இந்தப்பெண் அழகாக இருக்கிறாளா என்று என்னைக் கேட்டார். 'உனக்கு' அழகாக இருந்தபடியால் தானே அதைக்கவனமாக வைத்திருக்கிறாய் எனக்கு அவள் அழகாக இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன' என்று கேட்டேன்.

'உண்மைதான் உன்னைக்கேட்டிருக்கக்கூடாது உன்னைமட்டுமல்ல எந்தப்பெண்ணையும் அப்படிக் கேட்கக்கூடாது. இப்பொழுது அவள்தான் என்னேரமும் என்நெஞ்சில் நிறைந்திருக்கிறாள்' என்று சுரேஸ் சொன்னார். ஆனால் அவள் நெஞ்சில் நான் இருக்கிறேனா என்பது இப்போது சந்தேகமாக இருக்கிறது.

'என்றும் கவலையோடு சுரேஷ் சொன்னார்.' என்று இவளும் கவலையோடு சொன்னாள்.

'ஏன் அவளுக்கு இப்போது இவன் மேல் விருப்பம் இல்லையா?' என்று கேட்டேன்.

தான் அவளைக் காதலிக்கின்ற அளவுக்கு தன் மீது அவள் காதல் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. என்றும். தன்மீது அவளுக்கு அன்போ. பாசமோ துடிப்போ இருப்பதாகத் தெரியவில்லை என்றும் சுரேஷ் கவலைப்பட்டார்.

மாதா மாதம் அவளுக்கு 100 யூரோவுக்கு மேல் அவள் கைச்செலவுக்கு சுரேஸ் அனுப்பி வைத்தார். இத்துடன் மற்றும் சில பொருட்களையும் அவர் அனுப்பியிருக்கிறார். ஆனால் அவளோ அவற்றையெல்லாம். வாஞ்சையோடு பெற்றுக்கொண்டாள். பதிலுக்கு அவர் மீது தனது காதலையோ அன்பையோ கொடுக்கவில்லை. பேசும்போது கூட ஏதோ கடமைக்காக பேசுவது போல் பேசியிருந்தாளாம்.

காலையிலும் மாலையிலும் இடைநேரத்திலும் கூட அவளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு. மணிக்கணக்காக சுரேஸ் பேசிக்கொண்டிருப்பார். பின்னர் மாலைவேளையில் தனக்கு வேறு வேலை இருப்பதாகவும் தானே தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசுவதாகவும் அவள் சொல்லியிருக்கிறாள். இலங்கையிலிருந்து பிரான்சுக்கு தொலைபேசியில் தொடர்பு கொள்வது செலவுகுறைவு என்றும் அவள் சிக்கனத்தை சுட்டிக்காட்டி மடக்கியிருக்கிறாள்.

பின்னர் அவள் தொலைபேசியில் தொடர்பு கொள்வது குறைந்தது. தொடர்புகொண்டாலும் ஏதோ கடமைக்காகப் பேசுவது போலவும் பிரான்சுக்கு விரைவில் கூப்பிடுங்கள் தொலைபேசியில் பேசி என்ன பிரயோசனம் என்று வெறுப்புடன் பேசத் தொடங்கினாளாம்.

நாளாக நாளாக அவள் போக்கில் சுரேசுக்கு நம்பிக்கை குறைந்தது. இதற்கேற்றாற்போல அவனின் உறவுக்காரப் பையன் ஒருவன் அவளை வேறொருவனுடன் அடிக்கடி நெருக்கமாகப் பார்த்தது பற்றியும் தொலைபேசியில் சொல்லியிருக்கிறான். வேறு தகவல்களும் அவனுக்குக் கிடைத்தன.

அவளின் நடிப்பு வெளிப்பட்டது.

சுரேஷின் மனம் வேதனைப்பட்டது. தொலைபேசியில் கதைக்கும்போது அவளை அவன் இது பற்றிக் கேட்டிருக்கிறான். அவள் அலட்சியமாகப் பதில் சொல்லிவிட்டு உன்னிடம் நான் வரமாட்டேன் என்று சொல்லியிருக்கிறாள்.

"அவன் வேறொருவனுடன் உறவு வைத்திருந்தாலும் என் கண்முன்னேயே அவள் இன்னொருவனுடன் தொடர்பு வைத்திருந்தாலும்கூட அவளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தேன்" என்று சுரேஷ் என்னிடமே சொல்லியிருக்கிறாள்.

ஆனால். அவள் என்னைக் காதலிக்கவில்லை என்பது இப்போது தெரிந்துவிட்டது. என்றாலும். இன்னமும் நான் அவளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். மனைவியாக அல்ல. மணம் முடிக்காத மனைவியாக வைத்திருப்பேன்" என்று சுரேஷ் என்னிடமே தெரிவித்திருந்தான் என்று அவள் சொன்னதும்–

அதாவது. எங்கள் ஊர்ப்பாஷையில் சொன்னால் வைப்பாட்டியாக அல்லது ஆசை நாயகி என்று சொல்லலாம். தமிழ் நாட்டில் இதை 'சின்ன வீடு' என்று சொல்லுவார்கள் அப்படி வைத்திருகக விரும்பியிருக்கிறான் என்றேன்.

"அவள் சிரித்தாள். எப்படிச் சொன்னாலும் சரி. இங்கு நாங்கள் ஒருவனைக் காதலித்தால் மணம் முடிக்காமல் அவனுடன் கூடி வாழுகின்றோம். ஆனால். அவனுடன் உறவு வைத்துக்கொண்டு இன்னொருவனுடன் தொடர்புகொள்ளமாட்டோம் இன்னொருவனைக் காதலிக்கவும். கள்ளத் தொடர்பு வைக்கவும் மாட்டோம்." என்றாள்.

"இப்பொழுதும்கூட மணம்முடிக்காத மனைவியாக ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாக அந்தப் பெண்ணிடம் சுரேஷ் சொன்னானா?" என்று கேட்டேன்.

"ஆமாம் அவன் இதைச் சொல்லியிருக்கிறான்" என்று சொன்ன அவள். பிரான்சுக்கு வந்து உன்னிடம் மணம்முடிக்காத மனைவியாக இருப்பதற்குப் பதிலாக என்னை வைத்திருந்தவருடனேயே என்று சொன்னாளாம் என்று சொன்ன அந்தப் பிரேஞ்சுப் பெண் ஆனால் இந்தக் கதை சோகத்தில் முடியுமென்று நான் நினைத்திருக்கவில்லையென்று கவலையோடு சொன்னாள்.

அவன். அதுதான் அந்த சுரேஷ் அவளுக்காகத் தன் உயிரையே மாய்த்துக்கொண்டான் என்று அவன் சொன்னபோது. அவள் கண்கள் கலங்கிவிட்டன.

அவன் ஒரு மடையன் என்றேன்.

மடையனோ நம்பிக்கெட்டவனோ அவன் போய்விட்டான் என்று சொல்லியபடி எழுந்தான்.

அப்போ அவள் என்றேன்.

அவள் புதிய முகவரி தேடித் திரிகிறாளாம் என்றவாறே பிரஞ்சுப் பெண் வெளியேறிச் சென்றாள்.

அப்பா வாங்கோ என்று எனது மகன் கூப்பிட்டதும் தான் நான் நினைக்குமிடம் நினைவுக்கு வந்தது.

## ஒரு அஞ்சலிக் குறிப்பு

# தமிழ்க் கண் ஒன்று விழி மூடியது!...



எம் மண்ணில் தமிழ் மொழியை நிலைநிறுத்தவெனத் தமிழ்க்கண்ணோடு வாழ்ந்தவர் சொக்கன். 'என்னை இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே' என்ற கூற்றுக்கு வடிவமாகத் திகழ்ந்தவர். அவருடைய தமிழ்க்கண் விழிமூடிய செய்தி உள்ளத்தை ஒரு கணம் உறைய வைத்தது. தமிழுக்காய் அல்லும் பகலும் தொண்டாற்றிய ஒருவரை இழந்தது ஈடுசெய்ய முடியாதது. காலத்தின் கணக்கை உணர்ந்து, தம் பணியைச் செய்த பெருமகன் அவர். மூன்று மாதங்களுக்கு முன்னர் ஒருநாள் மாலை அவரை நேரில் காணச் சென்றேன். கணவரும் உடன் வந்திருந்தார். சொக்கன் அப்போது தனியாக வீட்டில் இருந்தார். நோயின் காரணமாக ஓய்வை மேற்கொண்டு வீட்டில் முடங்கிவிட்டேன். உங்கள் வருகை எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது என, வரவேற்ற போது எங்கள் மனமும் பெருமகிழ்வுற்றது. ஏறக்குறைய 2 மணிநேரம் உரையாடினோம். 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழ்த் தொடர் பாடல்களையெல்லாம் நினைவுபடுத்திச் சிரித்து மகிழ்ந்தோம். அன்றைய பொழுது பயனாகக்கழிந்தது.

பாடசாலை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, பல்கலைக்கழகம், பொது மன்றம் என நாம் ஒன்றாய்த் தமிழ்ப் பணி செய்த நிலைகளை மீட்டுச் சுவைத்தோம். அந்தச் சந்திப்பு எமக்கு அழியாத கோலம். இன்று அவர் இழப்பைத் தாங்கி, மீண்டும் தமிழ்ப் பணி செய்ய ஊக்கும் நினைவுச் சுரங்கம். அன்று எதிர்காலத்து தமிழ்ப் பணி என்ன என்பதை அந்தத் தமிழ்க்கண் சுட்டியது. அதன் விழிகளின் சுடர்தந்த ஆற்றல் எம்மை வழிகாட்டல் செய்து, எம்மை வழி நடத்தும்.

தமிழன் என்ற நிலையில் சொக்கன் வாழ்வு உச்சப் பயன் பெற்றது. பலர் பயன் பெற நடந்தது. இல்லறக் கடமைகளோடு தமிழ் மொழிக் கடமைகளையும் இனிதாய் நிறைவேற்றிய செயல் வீரர். இந்த மண்ணில் அவர் செய்த பணிகள் சிலவற்றுக்குத் துணையாக நின்றபோது, எம் வாழ்க்கையில் பொன்னான போதுகள் பேச்சு, எழுத்து, உரையாடல் என சொக்கன் எம்மைத் தம்மோடு இறுகவே பிணித்துக் கொண்டார். அந்தப் பிணைப்புத்தான் எம்மைப் பணி செய்யத் தூண்டி நிற்கிறது. தான் செய்யமுடியாததை, நாம் செய்திருப்பதை அவர் உள்ளம் திறந்து அன்று பாராட்டிய கணங்கள் சொக்கன் எம்மீது கொண்டிருந்த ஆழமான அன்பைப் புலப்படுத்தியது. அவர் விழி மூடியபோது எமது பணிகளில் தமிழ்க் கண்ணாக நின்று உதவுவார். பாயும் ஒளி நீ எனக்கு என்று பாரதி பாடிய கவிதை வரிகளின் பொருளாகச் சொக்கன் எம் கண்களில் கலந்துவிட்டார். துன்பமே இயற்கை என்னும் சொல்லை மறந்திடுவோம். அவர் காட்டிய வழியில் பணிசெய்வோம்.

மனோன்மணி சண்முகதாஸ்

## அன்பின் வலி

நான் பாரொடு விண்ணாய்ப் பரந்தவன்
நீ இரண்டுக்குமே தண்மை அளிக்கும் மழை
– முகிலானவள்

கலைந்தனவாகிய எமதன்புடை நெஞ்சம்
ஒரு மலை முகட்டில் வாழும் பறவை போல்
கட்டுக்கடங்காதது.
இப் பூவுலகோர்
அம்பும் வில்லுமாய் அலையும் மலை வேடுவர்

ஊழிப் பெரு வெள்ளத்தில் இம்
–மண்ணுருண்டை

மூழ்குவதாய் நான் கற்பனிக்கையில்
கர்ணப் பேழையாய் மிதந்து
என்னை மட்டும் கரையேற்றிச் செல்கிறாயே
ஏனடி என் கனவுத் தோழி.

நீ எனக்கு யாதுமாகி நின்றவள்
நான் காதலாகிக் கசிந்து
கண்ணீர் மல்குகிறேன்
ஏதொன்றும் அறியார் போல்
வேடமணிந்த அயலும் சுற்றமும்
படகோட்டுகிறது என் கண்ணீரில்.

வேறொன்றும் இல்லையடி தோழியதன்
–காரணம்

இப் பூமியர் எல்லோருக்கும்
ஞானக் கண் திறப்பதற்காய் என்றோ ஒரு
– நான்

ஆதிபிதா ஆதாம் புசித்த அப்பிளின்
வீரியத் தன்மை விட்டொழிந்து போயிற்றடி.

இமை திறந்திருக்க கண் மூடிக் கிடக்கும்
இவர்களின் இயல்பொழிக்க
இன்னுமோர் ஆதாமுக்கும் அவன் புசித்த
– அப்பிளுக்குமாய்

எங்கு சென்றலைவோமடி என் கனவுத் தோழி.

வேல் – லவன்

## சமாதானத் தீ



என் வழிகள் சமாதானத் தீயில்
நிலைத்துக்கொண்டபோது
ஏமாற்றின் தழும்புகளே மிச்சம்

விடியும் ஒவ்வொரு பொழுதும்
சாக்குரலோடே விடிகிறது
என் வாழ்வில் வசந்த கால மேகம்

மௌனமாய் புதையுண்டு ஓலமிட்டது
கரையும் கால நாடிகளில்
கறுப்புத் திரை மூடிய கணங்களாய்

எவரை பார்க்கையில், ஏக்கப் பார்வை
இனம் புரியாத தவிப்பு மேடை
இமை மூடிய மனிதங்களின் வாழ்வு

சமாதானத் தீயாய் சுடுகிறது
வெள்ளை முகங்கள் ஆதரவோடு
அவர்கள் எமைத் தடவி நின்றபோது
பல வர்ணக் கொடிகள் எம் தாய் நிலத்தில்

தொட்டு நின்றபோது புனர்வாழ்வு புனரமைப்பு
சுயர் சுடைப்பு எதிர்காலம் எனப் பேச்சுக்கள்
பதாகைகள் மிளிர்ந்தது மெய்யுருகி
ஆனந்தக் கண்ணீர் சொரிய இதயம்
– குளிர்ந்தோம்

மூன்று ஆண்டு ஓடிக் கழிந்தது
புதிய ஒளி முகம் கொண்ட எம் முகம்
இருண்டது யுத்தம் மீண்டும் உறங்கியது
ஆ... எனப் புரியாது வாய் பிளந்து நிற்கிறோம்.

தா.பாலகணேஷன்.

## தேடலும் பகிர்தலும்

# களத்திலேயே வீழ்வோம்!




அண்மைக் காலங்களில் வெள்ளிநாதம் மற்றும் வெளிச்சம் சஞ்சிகைகளில் 'வின்சன்ற் புளோரன்ஸ்' என்ற பெயரில் வெளியான ஆக்கங்களின் ஈர்ப்பு. யார் இந்த 'வி.பி' என வியக்க வைத்திருந்தது. கடந்தமாதம் கிளிநொச்சி போய்த் திரும்பிய போதுதான். வி.பி வேறுயாருமல்லர். என் நெடுநாளைய நண்பர் வி.பி யோசப் என அறிய முடிந்தது.

யோசப். அறுபதுகளின் பிற்பகுதியிலேயே. கட்டுபெத்தை தொழில்நுட்பக் கல்லூரியில் (இன்றைய மொறட்டுவ பல்கலைக் கழகம்) பொறியியல் டிப்ளோமா கல்வி பயின்றவர். இன்றைக்கு ஒரு போராளி மாவீரரின் தந்தை. திறனும் பட்டறிவும் பெற்ற மொழிபெயர்ப்பாளர். 'தாயகம் நோக்கிய பயணம்' அவரது பெயர் சொல்லும் மொழிபெயர்ப்பு 'எக்ஸ்டோஸ்' என்ற இந்த லியோன் யூரிஸின் நாவலைத் தமிழாக்கும் முயற்சி எழுபதுகளின் தொடக்கத்தில் சில இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்டு. 'நமக்கென்றொரு நாடு' எனுந் தலைப்பில். தமிழர் சுயாட்சிக்கழக வெளியீடான 'விடுதலை' பத்திரிகையில் தொடராகச் சில அத்தியாயங்கள் வந்த நிலையில். விடுதலை நின்றுபோக அதுவும் முழுமைபெறாது போயிற்று. ஏறத்தாழ கால் நூற்றாண்டு கழித்து அந்த எத்தனத்தைக் கைகூட வைத்தவர் யோசப் 'ஈழநாதம்' வெளியீடாக இரு பாகங்களாக வெளி யான அந்தப் படைப்பு பரவலாக அறிமுகம் பெறாது போனமைக்கு நூலின் பெரிய அளவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாமோ என்றுபடுகிறது.

இந்தமுறை யோசப்பைச் சந்தித்தபோது குறிப்பிடத்தக்க இன்னுமொரு மொழிபெயர்ப்பு நூலை அவர் உருவாக்கியிருந்தமை தெரியவந்தது. 'களத்திலேயே வீழ்வோம்' என்ற இந்த மிக அருமையான கவிதைகளின் தொகுதியை "குழல்" என்ற – தம் அன்பு மகளிடம் அவர் இரவலாகப் பெற்ற – புனைபெயரில் யோசப் மொழிபெயர்த்துள்ளார். 2001 இலேயே வெளியான இந்த நூலை மூன்றாண்டுகள் கழித்துத்தான் படிக்க முடிந்ததே என்ற கழிவிரக்கமும். இப்போதாவது படிக்கக் கிட்டிற்றே என்ற மகிழ்வும் அதைப் படித்து முடித்தபோது ஒருங்கே கிளர்ந்தன. கூடவே. இப்படியான ஒரு அருமையான (இச்சொல். திரும்பவும். அதன் இரு பொருட்களிலும். வலியுறுத்தப்படுகிறது) கவிதைகளின் தொகுதி எவ்வாறு பேசப்படாமல் விடப்பட்டது என்ற ஆதங்கமும். ஆத்திரமும் ஒன்றாக எழுந்தன.

இலக்கியங்கள் என்பவற்றையும் விளம்பரங்கள் தான் – இன்றைய இலங்கைத் தமிழ்ச் சூழலில் – தீர்மானிக்கின்றனவா? இல்லையேல். கடந்த ஐந்தாண்டுகளில் வெளியான மொழிபெயர்ப்புக்களில் முதன்மை பெறவேண்டிய இந்தத் தொகுதி – பரிசுகள். விருதுகள்தான் போகட்டும் – கவனமாவது பெறாது போனதன் காரணந்தான் வேறென்னவாக இருக்கமுடியும்?

இவ்வளவு கவிதைகளையும் குழல் எவ்வாறு தேடிப்படித்தார் என்ற வியப்பும் – பொறாமையும் – தவிர்க்கமுடியாதவாறு எழுகின்றன. முக்கால் பங்கு ஆபிரிக்கக் கவிதைகளாயிருப்பினும். இங்கிலாந்து. கனடா. ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளின் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன. கால. தேச எல்லைகள் கவிதைத் தேர்வின் எல்லைகளாகிவிடவில்லை.

தொகுதியின் இன்னொரு சிறப்பு. சிதம்பர திருச்செந்திநாதனின் அழகும். ஆழமும் மிக்க முன்னுரை. பொருளடக்கம் ஒன்றைச். சேர்த்து. சில கவிஞர்கள் பற்றிய அறிமுகம் திரும்பத் திரும்பத் தரப்பட்டிருப்பதைத் தவிர்த்திருப்பின். நூலாக்கம் மேலும் முழுமை பெற்றிருக்குமென்று படுகிறது.

–சாந்தன்–

# இடம்பெயர்ந்து இந்தியாவில் வாழ்ந்து
# நாடு திரும்பியவருக்கான நடமாடும்சேவை

இனப்பிரச்சினை காரணமாக பல ஆண்டுகளாக இடம்பெயர்ந்து இந்தியாவில் வாழ்ந்த பின்னர் நாடு திருமபியுள்ள வர்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் நடமாடும் சேவை ஒன்று நேற்றுமுன்தினம் வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த நடமாடும் சேவையில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், இறப்பு அத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை போன்ற அடிப்படைத் தேவையான ஆவணங்கள் அனைத்தையும் பெறக்கூடிய வகையில் ஏற்பாடு செய்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நடமாடும் சேவையை ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான அமைப்பு மற்றும் வவுனியா அரச செயலகமும் இணைந்தே இந்தச் சேவையை ஏற்பாடு செய்திருந்தது.

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான அமைப்பின் புள்ளி விபரங்களின் படி, இந்த ஆண்டு கடந்த ஒக்ரோபர் மாதம் வரை 840 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 439 பேர் தற்போது இலங்கைக்கு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த எண்ணிக்கையை விட தற்போது அதிகமாக உள்ளதாக வவுனியா மாவட்ட அரச செயலகத்தின் திட்டமிடல் பிரிவு தெரிவித்துள்ளது.


இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், வவுனியா யு.என்.எச்.சீ.ஆர் அதிகாரி ஜிம் வொறல், திணைக்கள அதிகாரிகள், கிராம சேவையாளர்கள் எனப் பல பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதில் வவுனியா யு.என்.எச்.சீ.ஆர் அதிகாரி ஜிம் வொறல் கருத்து தெரிவிக்கையில்-

இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து இந்தியாவில் வாழ்ந்து, தற்போது நாடு திரும்பியுள்ளவர்களின் அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டியது கட்டாய கடமையாகும், இதனாலேயே இவ்வாறான ஒரு நடமாடும் சேவையைத் தாம் ஏற்பாடு செய்ததாக தெரிவித்தார்.

நீண்ட காலமாக இந்தியாவில் தங்கி விட்டு, எந்தவிதமான ஆவணங்களும் இல்லாமல் வந்துள்ள தமக்கு இவ்வாறான முறைகளால் சுலபமாக ஆவணங்களைப் பெற்று தருவதன் மூலமாக நன்மை அடைவதாக நிகழ்வில் கலந்து கொண்ட பலரும் கருத்து தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் பல நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



போரூட் நிறுவன நிதியுதவியுடன், கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன அனுசரணையுடன் பயனாளி ஒருவருக்கு கிளிநொச்சி கிழக்கு திட்ட இணைப்பாளர் வே.பிரபாகரன் தென்னங்கன்று வழங்குவதை படத்தில் காணலாம். படம்: வே.சீலன்

# பூநகரியில் முன்பள்ளி சிறார்களுக்கு கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்தின் முன்பள்ளி சிறார்கள் கௌரவிப்பு நிகழ்வு- கடந்த புதன்கிழமை மாலை 2 மணிக்கு இடம் பெற்றது.

பூநகரி முட்கொம்பன் உதயா முன்பள்ளியில் கல்வி பயின்று, அடுத்த ஆண்டு தரம் ஒன்றில் கல்வி கற்கவுள்ள சிறார்களுக்கே கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை பிரதேச முன்பள்ளி தலைவர் செல்வம் ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக் கொடியை பூநகரிப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈகை.வேந்தன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து சிறார்கள் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.





# வவுனியா - செட்டிகுளம் பகுதியில் கால்நடைகள் கடத்தல் அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா - செட்டிகுளம் பிரதேசத்தில் அண்மை நாட்களாக காலநடைகளைக் கடத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த புதன்கிழமை இரவு செட்டிகுளம், முகத்தான்குளம், முதலியார்குளம் ஆகிய பிரதேசங்களில் லொறிகளில் சென்று மக்கள் நடமாட்டமற்ற பகுதிகளில் உள்ள கால்நடைகளைக் கடத்திச் சென்றுள்ளனர்.

இதேபோன்று கடந்த வெள்ளிக்கிழமை இரவு இரண்டாவது முறையாக இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முதல் நடந்த சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டும், விசாரணைகள் மேற கொள்ளப்படவில்லை. இவ்வாறு கால்நடைகளைக் கடத்திச் செல்பவர்கள் குட்டிகுளம், தந்திரிமலை, அடம்பன்குளம், காட்டு மாங்குளம் பொலிஸ் நிலையங்களைத் தாண்டியே செல்கின்றனர்.

இவ்வாறான கடத்தல் சம்பவங்களுக்கு பொலிஸாரும் துணை போவதாகத் தெரியவருகிறது.

# வன்னியில் மிக தீவிரமான முறையில் கட்டக்காலி நாய் ஒழிப்பு நடவடிக்கை

வன்னிப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய் ஒழிப்பு நடவடிக்கை தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தப் பிரதேசத்தின் அரச அலுவலகங்கள், மருத்துவமனைகள், முகாம்கள் மற்றும் பொது இடங்களில் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இதனால் பொதுமக்கள் தமது வளர்ப்பு நாய்களை பிரதேச சபையிடம் பதிவு செய்து அடையாள கழுத்துப்பட்டிகளை அணிந்து கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவித் துள்ளனர்.

அத்துடன் வீட்டு நாய்களை பாதுகாப்பாக வளர்ப்போம், கட்டாக்காலி நாய்களை அழிக்க ஒத்துழைப்போம் எனும் வாசகமடங்கிய துண்டுப் பிரசுரம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

# அஞ்சல் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தருக்கு பளை அஞ்சல் அலுவலகத்தில் பிரிவுபசார விழா

(வவுனியா)

வவுனியா, முல்லைத்தீவு மாவடடங்களின் பிரதேச அத்தியட்சகராக இருந்து பதவி உயர்வு பெற்று, அஞ்சல் திணைக்கள பிரதேச நிர்வாக உத்தியோகத்தராக நியமனம் பெற்றுச் சென்ற வீ.குமரகுருவுக்கு- பிரிவுபசார விழா அண்மையில் பளை அஞ்சல் அலுவலகத்தில் பளை அஞ்சல் அதிபர் பொ.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இநத விழாவில் வரவேற்புரையை பளை உதவி அஞ்சலதிபர் வீ.யோகேஸ்வரன் நிகழ்த்தினார். சிறப்புரையை இயககச்சி உப அஞ்சலதிபர் ஆ.இராசரத்தினம், ஓய்வு பெற்ற உபஅஞ்சலதிபர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ், சாவகச்சேரி உதவி அஞ்சலதிபர் ஆ.சந்திரலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

பளை அஞ்சல் அலுவலகம் மற்றும் அதன் கட்டுப்பாட்டிலுள்ள உபஅஞ்சலகங்களிலிருந்தும் உப அஞ்சலதிபர்கள், கோலவுடைப்பணியாளர் ஆகியோர் விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

பளை அஞ்சல் அலுவலகத்தைச் சேர்ந்த து.திரவியரட்ணம் நன்றியுரை கூறினார். (21)

# நீண்ட காலமாக சேதமடைந்த நிலையில் வெள்ளாங்குளம்-பள்ளமடு வீதி

(மன்னார்)

மன்னார், வெள்ளாங்குளம்- பள்ளமடு வீதி மிகமோசமாக சேதமடைந்துள்ளமையால், இந்த வீதியினூடாகப் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மண்ணார் பாலியாற்றுக்கும -பள்ளமடுவுக்கும் இடையிலுள்ள 25 கிலோமீற்றர் நீளமான வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதுடன், அந்த வீதியிலுள்ள பாலங்கள் உடைந்த நிலையிலும் உள்ளன. இவ்வாறு இந்த வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

# கிளிநொச்சி பொருண்மிய மதியுரையகத்தால் கால்நடை வளர்ப்பு தொடர்பான பயிற்சி வகுப்பு

கிளிநொச்சி பொருண்மிய மதியுரையகத்தால், கிளிநொச்சி மாவட்ட உருத்திரீஸ்வரம் பிரதேசத்தில் 20 பயனாளிகளுக்கான விவசாயம், கால்நடை வளர்ப்பு தொடர்பான பயிற்சி வகுப்பு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி வகுப்புகள் 15 நாட்கள் நடைபெறவுள்ளன. இதன் மூலம் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களும், 14 வயதுக்கும் 18 வயதுக்கும், இடைப்பட்ட 10 பயனாளிகளும் பயன்பெறவுள்ளனர்.

இந்தப் பயிற்சியின் ஆரம்ப வைபவத்தின் தலைமையுரையை ஐ.ஐ.ஒ. நிறுவன மாவட்ட இணைப்பாளர் விஜேந்திரா நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து சிறப்புரைகள், கருத்துரைகள் நடைபெற்றன.

இந்தப் பயிற்சி வகுப்பை கிளிநொச்சி மாவட்ட கால்நடை வைத்தியர் கௌரிதிலகர் ஆரம்பித்து வைத்தார். இதனைத் தொடர்ந்து ஐ.ஐ.ஒ. நிறுவனத்தின் திட்ட அலுவலர் பிரதாப் விவசாய நடவடிக்கைகளுக்கான பயிற்சிகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் ஐ.ஐ.ஒ. நிறுவன திட்ட இணைப்பாளர் வைத்தியர் மனோகரன், மற்றும் மன்னார் மாவட்ட இணைப்பாளர் கி.பிரபாகரன, கிளிநொச்சி மாவட்ட வெளிக்கள அலுவலர் அ.சிவலிங்கம், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், செயலாளர், பொதுமக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அடிப்படை வசதியற்ற நிலையில் மன்னார் பாப்பாமோட்டை மக்கள்

(மன்னார்)

மன்னார் - பாப்பாமோட்டை பிரதேச மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் 150 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்து, மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், இந்தப் பகுதி மக்கள் போக்குவரத்து, மருத்துவவசதி, கல்வி வசதி போன்ற அடிப்படை வசதிகளை பெற்றுக் கொள்ள முடியாது, பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அவ்வாறு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதாயின், 15 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் சென்றே தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சி - பூநகரிப் பிரதேசத்தில் வெள்ளத்தால் 400 குடும்பங்கள் பாதிப்பு

கிளிநொச்சி - பூநகரியில் அண்மை நாட்களாகப் பெய்த மழை காரணமாக, 400 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பூநகரி, செட்டியாகுறிச்சி, கறுக்காய்தீவு, ஞானிமடம், செம்மண் குன்று போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது வீடுகளைவிட்டு பாடசாலைகளில் தங்கியுள்ளனர்.

இதில் கறுக்காய்தீவில் 122 குடும்பங்களும், ஞானிமடம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் 98 குடும்பங்களும், பல்லவராயன் கட்டில் 132 குடும்பங்களுமாக 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தொடர் மழையாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளன.

## கௌரவிப்பு நிகழ்வு

மன்னார் பண்டிவிரிச்சான் மகா வித்தியாலயத்தில் ஆண்டு இறுதி கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வு கடந்த வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது. இதில் 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொழித்திறன், விளையாட்டு, பொது அறிவு போன்ற பாடங்களில் வெற்றி பெற்றவர்களுக்கான கௌரவிப்பும், பரிசளிப்பும் இடம்பெற்றன.

# உலக எயிட்ஸ் தின கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பரிசளிப்பு விழா

(கிளிநொச்சி)

உலக் எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு, கடந்த மாதம் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு விழா அண்மையில் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சிறப்பாக நடைபெற்றது.

அகவணக்கத்துடனும், மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பித்த இந்த நிகழ்வில்- வரவேற்புரையை வைத்தியர் பாஸ்கரன் நிகழ்த்தினார். தலைமையுரையை கிளிநொச்சிப பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.சத்தியமூர்த்தி நிகழ்த்தினார்.

அவர் தனது உரையில்- இலங்கையில் 591 பேருக்கு எயிட்ஸ் நோய் இருப்பதாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளது, 3 ஆயிரத்து 500 பேர் வரையிலானோருக்கு இந்த நோய் பரவியிருக்கலாம் என சந்தேகிக்கப் படுகிறது, பாலியல் சம்பந்தமான கல்வியறிவின்மையே இந்த நோய் பரவுவதற்கான காரணம் என அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சிறப்புரையை கிளிநொச்சி யு.என்.எச்.சி.ஆர். தலைமை அலுவலக அதிகாரி அனிஸ்செற் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வின் கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட கல்வித்திணைக்களப் பணிப்பாளர் அரியரட்ணம், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வைத்திய நிபுணர் ஜெகராஜ் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் நன்றியுரையை சுகாதார கல்விப் போதகர் பிறேம்குமார் நிகழ்த்தினார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை*
*செறுவார்க்கும் செய்தல் அரிது.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அமைதிக்கு ஊறு விளைவிக்கும் உளவியல் யுத்த நடவழக்கைகள்

கிழக்கில் கருணாகுழு என்று இன்று எதுவும் கிடையாது கிழக்கைவிட்டு "தலைதப்பியது தம்பிரான் புண்ணியம்" கதறிக் கொண்டு, தலைதெறிக்கத் தப்பியோடி, எதிரிகளின் பாசறையில் சரணாகதியடைந்து அஞ்ஞாத வாசம்புரியும் கருணா என்ற தனிநபரின் பெயரைப் பயன்படுத்தி கருணா குழுவென நாமகரணம்செய்து இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களே இன்று கிழக்கில் மக்கள் மத்தியில் குழப்பத்தையும், பீதியையும் திட்டமிட்ட வகையில் உருவாக்கி அமைதியையும், சமாதானத்தையும் சிதைக்கும் உள்நோக்குடன் கூடிய மூலோபாயங்களை வகுத்து செயற்பட்டு வருகிறார்கள் என விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் கூற்றின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

கருணா குழுவின் தாக்குதல் செயற்பாடு என்று படைதரப்பினரால் கூறப்படுவதெல்லாம் இராணுவம் திட்டமிட்டு நடத்தும் ஒருவகை உளவியல் யுத்தமேயாகும் எனக் கௌசல்யன் குற்றம் சுமத்துவதை நிராகரித்துவிடமுடியாது.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஆயுத முனையில் அடக்க, என்றைக்கு சிங்கள ஆட்சியாளர்கள் யுத்தப் பிரகடனம் ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானம் கொண்டார்களோ, அன்றுமுதலே அந்த யுத்தத்தின் ஓர் முக்கிய அங்கமாக இராணுவப் புலனாய்வுப்பிரிவினரின் உளவியல் யுத்தமுறைகளும் நடைமுறைப்படுத்தலுக்குள்ளாயிற்று.

இந்த உளவியல் யுத்தமுறைகள் பல்வேறு குறிக்கோள்களுடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால், அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டுவந்த இராணுவ நடவடிக்கைகளின் தன்மைக்கேற்ப வடிவமைக்கப்பட்டு - செயற்படுத்தப்பட்டு வந்ததுடன், அது ஏற்படுத்திய தாக்கங்கள் தமிழ் மக்களிடையே கருத்தியல் - வாழ்வியல் ரீதியில் பாரதூரமான பாதிப்புகளையும் ஏற்படுத்தவே செய்தன.

இந்த உளவியல் யுத்தத்தை அரச - மற்றும் இராணுவப் புலனாய்வு இயந்திரங்கள், ஊடகங்கள் ஊடான பிரசார யுத்தமாகவும் அறிவையும், மனதையும் வெல்லும் (Winning Hearts and Minds) நாகரிகமான தந்திரோபாய ரீதியிலான அரவணைப்பையும், அச்சுறுத்தலையும் ஏக காலத்தில் ஏற்படுத்தும் தன்மை கொண்டதான ஆழ் மனத்தை செயற்பாட்டு ரீதியில் ஊடுருவி வெல்லும் அமைதி யுத்தமாகவும், ஆழ ஊடுருவி தாக்கும் (LRRP) அணியின் பீதியூட்டும் தாக்குதல் முறைகளின் மூலமாகவும், தேச மற்றும் சமூகவிரோத சந்தர்ப்பவாத குழுக்களைப் பயன்படுத்தி மேற்கொண்ட அராஜக ரீதியிலான தனிநபர்கள் மற்றும் புத்திஜீவிகளுக்கெதிரான குரூரமான படுகொலை நடவடிக்கைகளாகவும் மேற்கொண்டு வந்துள்ளமையைத் தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

கடந்த காலங்களில் இலங்கை அரசு வானிலிருந்து உலங்கு வானூர்திகள் மூலம் பிரசுரங்களைப் பல லட்சக்கணக்கில் வீசியும், வானொலியூடாக மக்கள் குரல் போன்ற நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியும் பொய்ப்பிரசார நடவடிக்கைகளை இந்த உளவியல் யுத்தத்தின் ஒரு அங்கமாகவே மேற்கொண்டு தோல்வி கண்ட வரலாற்றுப் பதிவுமுண்டு.

இந்தியப்படை தமிழர் தாயகப் பிரதேசத்தை ஆக்கிரமித்து நின்ற காலத்திலும், இம்மாதிரியான பிரசார ரீதியிலான உளவியல் யுத்தத்தை நடத்திப் பார்த்ததுமுண்டு. அன்புவழி, நேசக்கரங்கள், வெற்றிமாலை என்ற பெயர்கள் இந்தியப் படையினர் வானொலியூடாக நடத்திய கருத்தியல் ரீதியிலான உளவியல் யுத்தக் கோமாளித்தனத்தை தமிழ்மக்கள் இலகுவில் மறக்கவே முடியாது.

இன்றும்கூட இலங்கை வானொலி தென்றல் நிகழ்ச்சியூடாக இதயவீணை என்ற பெயரிலும், T.B.C. வானொலி என்ற சர்வதேச தமிழர் எதிர்ப்பு அரச சார்பு வானொலி நிறுவன ஒலிபரப்பினூடாகவும் , அரசு மேற்கொள்ளும் பொய்ப்பிரசார நிகழ்ச்சிகளும் உளவியல் போரின் அங்கங்களேயாகும்.

கிழக்கில் ஏற்கெனவே ராஸிக், புளொட்மோகன் போன்ற தமிழின விரோதிகளைப் பயன்படுத்தி இராணுவ புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட உளவியல் போர் நடவடிக்கைகள் அங்குவாழும் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஒரு காலத்தில் பெரும் பீதியை ஏற்படுத்தியதுடன் இருதரப்பினரிடையேயுமான நல்லுறவைச் சிதைக்கச் செய்ததையும் குறிப்பிட்டேயாக வேண்டும்.


இந்த அடிப்படையில் நோக்கினால் கௌசல்யன் கூறியவற்றில் இருக்கும் உண்மையைப் புரிந்துகொள்ளமுடியும்.

இந்த உளவியல் யுத்த நடவடிக்கைகள் யாவும் போர் நிறுத்த உடன்பாட்டை மீறும் - மறைமுகமாக ஒரு நிழல்யுத்தத்தைத் தொடரும் இராணுவ நடவடிக்கைகளாகவே கருதப்படவேண்டும்.

சமாதான முயற்சிகளை மேலும் தொடரவும், அரசியல் தீர்வொன்றை எட்டுவதில் தீவிரமாகச் செயற்படவும் விரும்புவதாக சர்வதேச சமூகத்திற்குக் கூறும் ஜனாதிபதியும், அரசும்- இராணுவப் புலனாய்வுப் பிரிவைப் பயன்படுத்தி நிழல்யுத்தம் ஒன்றை உளவியல் ரீதியில் மேற்கொள்வதில் தீவிரம் காட்டி வருவதானது முரண்நகையான விடயமேயாகும்.

எதிர்கால சமாதான முயற்சிகள் தொடர்பான அரசின் நகர்வுகள்மீது தமிழ்மக்கள் முற்றாக நம்பிக்கை இழக்க வைக்கும் செயற்பாடுகளாகவே, இந்த உளவியல் போர் அமைந்து வருகின்றது என்பதில் ஐயமில்லை. ஜனாதிபதியும், அரசும் சமாதானத்திற்கான யுத்தம் என்ற தமது தவறான கோட்பாட்டிலிருந்து இன்னமும் விலகத்தயாரில்லை என்பதையே இது உறுதி செய்வதாகவுமுள்ளது.

## நாடும் நடப்பும்




# மூதறிஞர் சொக்கனின் மறைவு தமிழ் உலகிற்கு பேரிழப்பாகும்!

### இரங்கல் செய்தியில் மா.க.ஈழவேந்தன் எம்.பி

மூன்று நூற்றாண்டுகள் வாழ்ந்து, இரண்டுகால் நூற்றாண்டுக்குமேல் தன் பேச்சாலும், எழுத்தாலும் தமிழ்கூறும் நல்லுலகைச் சொக்கவைத்த சொக்கனின் மறைவு தமிழ் உலகுக்குக்கே பேரிழப்பு.

இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் தெரிவித்தார்.

நாட்டுப்பற்றாளர் சொக்கனின் மறைவுகுறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த இரங்கலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இளமையில் தமிழ் இலக்கிய உலகில் காலடி எடுத்து வைத்து தம் இறுதி மூச்சவரை தமிழ் இலக்கிய உலகோடு இணைந்து செயற்பட்டவர். அவரின் மூன்றுகால் நூற்றாண்டு வாழ்வில் தமிழைப் பற்றியோ, தமிழ் இலக்கியம் பற்றியோ எண்ணாது, அவர் விலகி வாழ்ந்ததாக நாம் கூறமுடியாது. தமிழ் இலக்கியம் பற்றியும், அவர் கடைப்பிடித்த சைவ சித்தாந்தக் கோட்பாடு பற்றியும் அவருடன் பேசுவது எமக்குத் தனி இன்பத்தைத் தரும்.

அவர் படிக்காத தமிழ் இலக்கியங்கள் இல்லை. இலக்கியங்களை ஒப்புநோக்கி எவரையும் புண்படுத்தாது, பண்படுத்தும் முறையில் அமைதியாக அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் எம் சிந்தனைக்கு நல்லவிருந்து.

ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கும் திருவாசகத்துக்குத் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தவர் நம் சொக்கன் அவர்கள். திருவாசகத்துக்கு உருக்கும் தன்மை உண்டு என்பதை யாம் அறிவோம். ஆனால், நாம் அவரின் உரையைச் செவிமடுக்கின்றபோது எம்மை மீறி எம் கண்கள் கலங்கும். எம் உள்ளம் உருகி ஒரு தனியுலகில் எமை வாழவைக்கும். சில காலங்களுக்கு முன்பு அவர் தமிழகம் வந்திருந்தபோது, மயிலாப்பூரிலுள்ள சைவ சித்தாந்தப் பெருமன்றத்தில் உரை நிகழ்த்துவதற்காக அவரை அழைத்துச்சென்றேன். அவர் திருவாசகத்தில் ஓர் அங்கமாக விளங்கும் சிவபுராணத்திலுள்ள 72 வரியாகிய

"சோதியனே துன் இருளே
தோன்றாப் பெருமையனே" என்ற சொற்றொடரை வைத்து ஒருமணிநேரம் அவர் உரை நிகழ்த்தினார். இறைவன் சோதியாகவும், துன் இருளாகவும் விளங்குகின்றார் என்பதற்கு அவர் அளித்த விளக்கம் - அவையோரை வியப்பில் ஆழ்த்தியது. இறைவன் எப்படி, ஒரே நேரத்தில் ஒளியாகவும், இருளாகவும் விளங்குகின்றார் என்பதற்கு அவரைப்போல் வேறொருவர் விளக்கம் கொடுக்க முடியுமா என்பது பெருங்கேள்வி.

தமிழ் புலவர்கள், வித்துவான்கள், பண்டிதர்கள் பலர் தமிழ் இலக்கியத்தில், சிவநெறியில் மூழ்கித் திளைத்த நிலையில் தமிழர்களை எதிர்நோக்குகின்ற அரசியல் அழிவு பற்றியோ, சமுதாய சிக்கலைப் பற்றியோ கல்வித்துறையில் எம் சமுதாயம் மிகக் கீழ்நோக்கிச் சென்றுள்ளது.பற்றியோ அக்கறை கொள்ளாது, ஒதுங்கி வாழும் இயல்பு படைத்தவர் பலர். இவரோ காலத்தின் கருத்தோட்ட வளர்ச்சிக்கு ஏற்ப தமிழர்களை எதிர்நோக்குகின்ற அனைத்துச் சிக்கல்களையும் மாற்றியமைக்கவேண்டும் என்ற சிந்தனை உடையவர். ஆனால், மருந்தளவும் விளம்பரத்தை விரும்பாது அமைதியாகப் பணியாற்றியவர்.

இவை அனைத்தையும் நினைவில் கொண்டுதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காது வாழும் எம் தலைவர் பிரபாகரன் - மறைந்த நம் தமிழ் பெருந்தகைக்கு "நாட்டுப் பற்றாளர்" என்ற பொருள் பொதிந்த பட்டத்தை வழங்கி, அவரின் பெருமையை உலகறியச் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனுமதிக்கடிதம் வழங்குவதில் தாமதம் பயிற்சி பெறமுடியாத நிலையில் பட்டதாரிகள்

பட்டதாரிகளை அரச சேவையில் இணைக்கும் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டதாக விபரங்கள் வெளியாகிய போதிலும், பயிற்சி பெறுவதற்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படாமையால், பயிற்சி வகுப்புக்களில் இணைந்து கொள்ளமுடியவில்லை என பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்கும் அரசின் திட்டத்தின் கீழ் தற்போது, இரு கட்டங்களாக அவர்களுக்கான பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டு தற்சமயம் நடைபெற்று வருகின்றது. எனினும் இந்தப் பயிற்சி நெறியில், இணைந்து கொள்வதற்கு பல பட்டதாரிகளுக்கு அழைப்புக் கடிதங்கள் வரவில்லை. சிலருடைய பெயர் பத்திரிகையில் வந்தாலும் கூட, பயிற்சி நெறியில் இணையச் செல்லும்பொழுது இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் இல்லாமையால் பயிற்சியில் இணைந்துகொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பலரும் தமது நிலை குறித்து இது சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், அமைச்சுக்கள் உட்பட பலருக்கும் முறையிட்டும், இதுவரை எந்தவொரு பதிலும் கிடைக்காமையால் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

சிலமாதங்களுக்கு முன்னர் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவதற்கு முன்னோடியாக இரு கட்டங்களாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பயிற்சித் திட்டம், இந்தமாத இறுதியுடன் முடிவடைந்ததும், ஜனவரிமுதல் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிலையில் பயிற்சி வழங்கும் திட்டத்தில் பெயர் இடம்பெறாத பட்டதாரிகள் மிகவும், இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

2003 காலப்பகுதிகளில்கூட பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டம்பெற்று,வெளியேறியவர்களின் பெயர்கள்கூட தற்போது வெளியிட்ட பட்டியல்களில் இடம்பெற்றிருந்தபோதும்கூட, 98,99 க்கு முன்பு பல்கலைக்கழக கல்வியை முடித்து வெளியேறிய பலரது பெயர்களும், இந்தப் பட்டியல்களில் இடம்பெறவில்லை என பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட வடக்கு - கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளர், திருமதி.பி.சிவலிங்கம் இவ்வாறு பாதிக்கப்பட்ட பலர் தம்மிடம் முறையிட்டுள்ளதாகவும், இந்த விடயம் தொடர்பாக முடிவுகள் எடுப்பது கொழும்பில் உள்ள சம்மந்தப்பட்ட தலைவர்கள் மற்றும் திணைக்களங்கள் என்றும் இவர்களுடைய விபரங்கள் அடங்கிய பட்டியலை பொதுநிர்வாக அமைச்சின் செயலருக்கு அனுப்பவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## யாழ்.புகையிரத வீதியில் கழிவு கொட்டுவதால் துர்நாற்றம்

யாழ்.நகரின் குறுக்கு வீதிகளை இணைக்கும் புகையிரத நிலைய வீதிகளில் கழிவுகள் கொட்டப்படுவதால் தொடர்ந்து துர்நாற்றம் வீசுகின்றது.

கச்சேரி - நல்லூர் வீதி, சோமசுந்தரம்வீதி, கோயில் வீதி போன்ற வீதிகளை இணைக்கும் புகையிரத வீதிகளிலேயே பெருமளவில் கழிவுகள் தேங்கியுள்ளன.

இறந்த விலங்குகள், இறைச்சிக்காக வெட்டப்படும் கோழிகளின் எஞ்சிய பகுதிகளும் இந்தப்பகுதியில் கொட்டப்படுவதால் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் புகையிரதப் பாதையூடாகப் பயணம் செய்யமுடியாமல் உள்ளதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தவீதிகளிலேயே அரச, தனியார் நிறுவன அலுவலகங்கள் அமைந்துள்ளதுடன், வெளிநாட்டு பிரதிநிதிகளின் அலுவலகங்களும் நீண்டகாலமாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (91)

அரசியல் நோக்கு...

கே.ரீ.கணேசலிங்கம்


# இந்திய - இலங்கை கடற்படை ஒத்திகையானது கடற்பரப்பின் மீது ஆதிக்கம் செலுத்தும் முயற்சியே!

இலங்கையின் உள்ளநாட்டு போர்ச் சூழல் விரிவடைந்து செல்வதனையே கடந்தகால சம்பவங்கள் உணர்த்திவருகின்றன. இலங்கையின் ஆட்சியாளர் மட்டுமன்றி, இந்திய தரப்பும் போரை ஊக்குவிக்கும் நடவடிக்கையில் மீளவும் கவனம் செலுத்துவது போன்று தென்படுகின்றது. பிராந்திய நாடுகளிடையே தொடரும் அபிவிருத்தியும், அமைதியும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளதென கருதுகின்றபோக்கு தற்போதய இராணுவ, உளவுத்துறையிடம் காணப்படுகின்றது. அதற்கேற்பவே அதிரடி நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வருவதுடன், பாகிஸ்தானின் போக்கையும் கருததிற்கொண்டு செயற்ப்பட்டு வருகிறது.

இந்த வாரத்தில் இந்தியக் கடற்படைப் பிரிவு, இலங்கைக் கடற்படையுடன் இணைந்து கூட்டு கடற்பயிற்சி ஒன்றை மேறகொள்ளத் திட்டமிட்டுள்ளது. குறிபபாக இலங்கையின் கடற்பரப்பில தேடுதல், மீட்பு, மற்றும் கடற்பாதுகாப்பு என்பவற்றுக்கான பயிற்சியில் ஈடுபட உள்ளதாகவும், அதில் இந்திய ஆழ்கடல் கப்பல்கள், ரோந்துப் படகுகளைப் பயன்படுத்தப் போவதாகவும் இந்திய தரப்பு கூறியுள்ளது. இலங்கையின் கடற்படை - இந்தியாவிடம் கொள்வனவு செய்த கப்பலுடன் தாக்குதல் படகுகளும் மற்றும் டோராவகைப் படகுகளும் பயிற்சியில் ஈடுபடுத்தப் படவுள்ளதாகப் தெரியவந்துள்ளது.

இந்தக் கடற்படை பயிற்சிக்கான உடன்பாட்டில் - இலங்கை ஜனாதிபதி இந்தியாவுகககு சென்றசமயம் இணக்கம் கண்டிருந்தார். ஆனால், உள்நாட்டில் ஏற்பட்டுவரும் நிலைமைகளும், அதிருப்திகளும் போர்நிறுத்த உடன்பாட்டை பாதிக்குமளவுக்குச் சென்றுகொண்டிருக்கிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில் ஏற்படவுள்ள பயிற்சி நடவடிக்கை மேலும் சந்தேகத்தைக் கிளப்புவதாக உள்ளது. ஏற்கனவே உலக நாடுகள் எல்லாவற்றிலும் பாரியளவான ஆயுத தளபாடங்களை இலங்கை அரசு கொள்வனவு செய்திருப்பதுடன், ஆளணியினரையும் பலிக்குச் சேர்த்துள்ளது. இது போரை இலங்கை அரசாங்கம் ஆரம்பிக்கத் தயாராவதையே காட்டியது. இதன் தொடர்ச்சியாகவே கடற்படைகளுக்கிடையிலான பயிற்சியும் அமையவுள்ளது.

இவ்வாறு இந்தியாவுடன் இணைந்து இலங்கை அரசாங்கம் கடற்படை பயிற்சியை நிகழ்த்துவதற்கு பலமான காரணம் விடுதலைப் புலிகளின் கடற்படைப் பலமாகும். கணிசமான தாக்குதல்களைப் பூரணப்படுத்தி, வெற்றிகளை ஏற்படுத்திய தாக்குதல்களில் கடற்புலிகளின் பங்கு காத்திரமானதாகவே அமைந்திருக்கின்றது. இதனால் இலங்கை அரசாங்கமே, இந்தியாவின் கடற்படையுடன் சேர்ந்து, விடுதலைப் புலிகளின் கடற்படையைக் கட்டுப்படுத்தலாமெனக் கருதுகின்றது. அதற்கு ஏற்பவே பயிற்சியை மேற்கொள்கிறது. இது இந்தவகையான போர் ஒத்திகைகளை மேற்கொள்ளும் அணுகுமுறையினால், விடுதலைப்புலிகளைப் போருக்கு இழுக்கலாமெனக் கருதுகின்றதோ? அல்லது போரைத் தொடங்கவிடாது தடுக்கலாமென கருதுகின்றதோ? தெளிவாகவில்லை. குறிப்பாக இலங்கை அரசினதும் அதன் ஆதரவாளரினதும் நடவடிக்கைகள் மீண்டும் ஒரு போரைத் தொடக்குவதாகவே அமைந்திருக்கிறது. அதனை விடுதலைப் புலிகள் தரப்பு தொடங்குவது உசிதமானதென கணக்குப் போடுகிறது இலங்கை அரசாங்கத் தரப்பு.


பயிற்சியில் ஈடுபடவுள்ள இந்தியக் கடற்படைக் கப்பல்கள்

ஒருவகை பாதுகாப்புக்கான கடற்படை ஒத்திகையாகவே அமையவுள்ளது.

இத்தகைய பயிற்சித் திட்டங்கள் உணர்த்துவது - அடுத்தகட்ட ஈழப்போரின் பரிமாணத்தில் கடற்போர் முதன்மையானது என்பதாக அமையலாம். அதாவது இலங்கையின் பாரிய இராணுவ முகாங்களும், கேந்திர நிலைகளும் கடலையண்டிய பகுதிகளிலேயே காணப்படுகின்றன. தரைத் தாக்குதலின் உந்துசக்தியாகவும், விநியோக மையமாகவும் அமைந்திருப்பது கடற்பிரதேசமாகும். கடற்பிரதேசத்தைத் தக்கவைக்க இராணுவத் தரப்பு தவறுமாயின், கணிசமான நிலப்பரப்பை இழப்பதற்குச் சமமானதாக அமைந்துவிடும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், இந்தவகைப் பயிற்சித் திட்டங்கள் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன.

இலங்கை அரசாங்கம் - கடல்ரீதியான அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்கும் போராக அடுத்தகட்டப்போர் அமைந்துவிடும் என்ற பரிமாணத்தில் பல முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. உள்நாட்டில், கடற்படையைப் பலப்படுத்துவதுடன், அதற்கான ஆயுத தளபாடத்திலும், தொழில்நுட்ப ரீதியான அயுதத் தளபாடத்திலும் அதிக கவனத்தைச் செலுத்தி வருகின்றது. அத்தோடு, கடற்படைக்கான ஒத்திகைகளை போர் சார்ந்த விதத்தில் மேற்கொள்ள முனைவதுடன், கடல் சார்ந்த தாக்குதல் உத்திகளை திட்டமிட்டு வருவது புலனாகின்றது.

எனவே இந்திய - இலங்கைக் கடற்படை ஒத்திகையானது - இலங்கை கடற்பரப்பை பாதுகாக்கும் முயற்சியாகவே அமைந்துள்ளது. சிலவேளைகளில் இலங்கைத் தரப்பு, இந்தியத் தரப்புடன் இணைந்து தொடங்கவிடாது தடுக்கலாமென கருதுகின்றதோ? தெளிவாகவில்லை. குறிப்பாக இலங்கை அரசினதும் அதன் ஆதரவாளரினதும் நடவடிக்கைகள் மீண்டும் ஒரு போரைத் தொடக்குவதாகவே அமைந்திருக்கிறது. அதனை விடுதலைப் புலிகள் தரப்பு தொடங்குவது உசிதமானதென கணக்குப் போடுகிறது இலங்கை அரசாங்கத் தரப்பு.

இந்தியாவைப் பொறுத்தவரை அமைதியான இலங்கையைவிட, குழப்பகரமான இலங்கையாக இருப்பதை விரும்புகிறது. விடுதலைப் புலிகளைப் போருக்குள் இழுப்பதைவிட, மாற்று வழியில்லையென கருதினால் - போருக்கும், சமாதான வழிமுறைமூலம் தமிழர்களையும் அவர்களது விடுதலைப் போராட்டத்தையும் பலவீனப்படுத்தி, நெருக்கடிக்குள்ளாக்க முடியுமாயின் சமாதான வழிமுறையூடாகத் தீர்வுகாண விரும்புகிறது. இது தீர்வல்ல, திணிப்பு. இதன் ஒரு பரிமாணம் தமிழ் மக்களைப் பாதிப்பது போல், தென் இலங்கையையும் பாதிக்கும்.

இத்தகைய கடற்பயிற்சிகள் நாடுகளுக்கிடையான உறவுகளைப் பலப்படுத்துவதுடன், இராணுவ தொழில்நுட்பப் பரிமாற்றத்தையும் அதிகப்படுத்துகின்றதாகவே அமையும். இலங்கை - இந்திய பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாத்திடாது தவிர்க்கப்பட்டதுடன், இரண்டு தரப்பின் இராணுவ ஒத்துழைப்புக்களும் நின்றுபோய் விடாது என்பதற்குப் பயிற்சி திட்டம் சிறந்த எடுத்துக்காட்டாகும். இலங்கைத்தரப்பு பாதுகாப்பு உடன்பாடுகளைப் பிற்போட்டாலும், இந்தியா சாதாரண வழிமுறைகளைப் பயன்படுத்தி, அதற்குச் சமமான எல்லையை அடைய முயன்றுவிடும். மேலும் அவ்வாறன உடன்பாடுகளுக்கு நிகராக அம்சங்களை ஆற்றி, உடன்பாட்டுக்கு வழிவகுத்துவிடும்.

மேலும் பாகிஸ்தான் - இலங்கை இராணுவ ஆயுத உறவை பெரியளவில் ஏற்றுககொள்ளாத இந்தியா - தனது கொல்லைப்புற நாட்டை உதாசீனம் செய்யாது அணைத்துவைத்திருக்கவே விரும்பும். அத்தகைய முயற்சியிலேயே இந்தியா எப்போது பிராந்திய அரசுகளைக் கையாண்டுள்ளது. பிராந்தியத்தின்மீது ஏனைய அரசுகளின் தலையீட்டை விரும்பாத இந்தியா - பிராந்திய நாடுகளுக்குள்ளும் எற்படும் நெருக்கத்தைத் தவிர்க்க விரும்புகிறது.

எனவே, கடற்படைகளுக்கிடையிலான ஒத்திகை முயற்சியானது - இந்தியாவின் ஆதிக்கத்தைக் காட்டுவதற்கான நகர்வாகவே பார்க்கப்படுதல் பொருத்தமானது. இலங்கையின் விடயத்திலும், பிராந்திய மட்டத்திலும் இந்தியாவின் ஆதிக்கத்தையே இந்த நடவடிக்கையாக வெளிப்படுத்துகின்றது.

எனவே இலங்கை - இந்தியத் தரப்பின் பிரதான நோக்கம் தற்போது காணப்படும் போக்கை இனப்பிரச்சினை விடயத்தில் தக்கவைத்துக் கொள்ளுதலாகும். விடுதலைப் புலிகள் போரை தொடக்க முடியாத நெருக்கடிகளைக் கொடுப்பது அல்லது போருக்கு தயாராவது என்ற இரண்டு அணுகுமுறையையே இரண்டு தரப்பும் பின்பற்ற விரும்புகிறது. ஆபத்தான சூழலில் கைகொடுக்கும் இந்தியா - இலங்கை விடயத்தில் அத்தகைய கொள்கையை சமாதான காலத்திலும் கடைப்பிடித்து வருகின்றது.

இலங்கை அரசாங்கம் இந்தியத்தரப்புக்கு துரோகமிழைத்தாலும், அழிவுக்கு உட்படுத்தினாலும் இந்தியா - இலங்கை தரப்பை உதாசீனம் செய்யத் தயாராகாது. நிச்சயமாக இலங்கை அரசாங்கத்தால் ஒரு காலப்பகுதியிலும் இந்தியத் தரப்புக்கு விசுவாசமாக நடக்காது. அதற்கான புவியியல் நிலையிலும் பொருளாதார - இராணுவ வலுவிலும் இலங்கை இல்லை என்பதுடன், இந்தியாவின் எஜமான அரசியல் போக்கு யதார்த்தமான மாறுதலை ஒருபோதும் ஏற்படுத்தாது. அது எந்த நிலையிலும் மேலாதிக்க அரசியல் போக்கையே கடைப்பிடிக்க விரும்புகிறது.

இதுவே இலங்கை இனப் பிரச்சினைக்கான தீர்வில் இந்தியாவின் பங்காக உள்ளது. ✯✯✯✯✯✯✯✯✯✯✯✯✯✯

## சொக்கனுக்கோர் கவிதாஞ்சலி



## அன்புப் பூக்கள் ஆயிரம் சொரிவோம்

வாய்மைக்கென்று
வாய்த்தவன் தமிழை
வண்மை செய்து
வளம்பல வாக்கித்
தூய்மை செய்து
துலக்கிய ஒருவன்
தொன்மை யிருந்தவை
புதுக்கிய கலைஞன்
தாய்மை முறுவல்
தனிப் பெருங் கருணை
தேயா முகத்தன்
தொலையாச் செயலன்
சேய்மை யிடத்தைத்
தெரிந்தவன் போனான்
திகைத்தோம் விழிகள்
புனற்பெருக் காணோம்.

இலக்கணச் சதங்கை
இன்னொலி யிழந்து
இடிவிழிந் தன்னப்
புலம்பிடும் சொக்கன்
இயற்றித் தந்த
இலக்கிய வீணை
இன்னரம் பறுந்து
இழமெனும் நாவின்

நலங்களால் மகிழ்ந்து
உலவிய காற்று
நலிந்து போம் நாளும்
நடையொழிந் திருக்கும்
கலங்கிடா உருக்கின்
விழிகளும் உருகக்
காற்றிடை ஏறினன்
கண்டுளம் பதைத்தோம்...

அரங்கிவன் வருகையில்
அணிபல கண்டது
ஆய்கலை யாவும்
அவன் துணை யிருந்தது
இரங்கிடும் இன்றிவன்
இலையெனும் உண்மை
இடியெனச் செவியில்
ஏறிடும் வகையால்
வரங்களாய்க் கல்விக்
கழகத்துப் பணிகள்
வழங்கிய சொக்கன்

வாழ்விற் தன் னெல்லை
தெரிந்து தான் போனா
னாயினும் எங்கள்
தோள்வலி தொலைந்த
துன்பம றிந்தோம்

கற்றறிந் துதவிய
கருணையன் பிரிவு
வெற்றிடம் அதனை
நிரப்பிடும் தகைமை
உற்றவர் எவரோ?
மூன்று நற் தமிழின்

தத்துவம் விளக்கும்

தாய்மடிந் தென்ன
நற்றவன் பிரிந்தான்
நாற்றிசை மறைய
வற்றிய குளமாய்
வாயெடுத் தரற்றிப்
பெற்றிகள் பெருமைப்
பேச்சோடு கைகள்
உச்சியிற் குவித்தோம்
வேறெது செய்வோம்?

உலகப் பெருமை
பிறத்தலும் முடிவும்
உணர்வோ மதனால்
ஊறிடும் விழிநீர்
அகலத் துடைத்து
அருந்தவன் தாளில்
அன்புப் பூக்கள்
ஆயிரம் சொரிவோம்.



தமிழீழக் கல்விக் கழகம்,
தமிழீழத் தமிழ் வளர்ச்சிக்கழகம்,
தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை.

# ஆப்கானில் தலிபான்களுக்கெதிராக அமெரிக்கப் படை பாரிய நடவடிக்கை!

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் மற்றும் அல் - கொய்டா போராளிகளுக்கெதிராக பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை அமெரிக்கப் படைகள் ஆரம்பித்துள்ளன.

'ஒப்றேஷன் மின்னல்' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த இராணுவத் தாக்குதலில் 18 ஆயிரம் அமெரிக்கப் படைகள் ஈடுபட்டுள்ளன.

ஆப்கானிஸ்தானின் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளின் மாநிலங்களில் உள்ள மலைப்பிரதேசங்களில் இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளிலேயே தலிபான் மற்றும் அல் - கொய்டா தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த வருடம் ஆப்கானிஸ்தானில் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கு முற்பாதுகாப்பாக தலிபான் மற்றும் அல் - கொய்டா தீவிரவாதிகளை ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற்றும் நோக்கிலேயே இத்தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலிபான்களிடமிருந்து ஆப்கானிஸ்தானை அமெரிக்க கூட்டுப் படைகள் கைப்பற்றுவதற்கு மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையைப் போன்றே இந்த இராணுவ



நடவடிக்கையும் பாரிய எடுப்பில் மேற் கொள்ளப்பட்டுவருவதாக அமெரிக்க படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த

# அமெரிக்க ஹெலி விபத்து 6 பேரைக் காணவில்லை!

மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்காவின் சொப்பர் ரக ஹெலிகொப்டர் கடலில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் காணாமற் போயுள்ளனர்.

இந்தச் சம்பவம் தென்மேற்கு அலாஸ்காருக்கு அப்பாலுள்ள கடற் பகுதியில் இடம்பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

கடந்த செவ்வாய்க்கிழமை இந்த கடற்பகுதியில் சோயா பீன்ஸ் மற்றும் 4 இலட்சத்து 40 ஆயிரம் கலன் எரிபொருள் என்பவற்றுடன் ஜப்பான் நோக்கி சரக்குக் கப்பல் ஒன்று சென்று கொண்டிருந்தவேளை விபத்துக்குள்ளாகி இரண்டாக உடைந்தது.

இந்த நிலையில், இந்தக் கப்பலிலுள்ள மாலுமிகளை காப்பாற்றுவதற்காக பத்துப் பேருடன் குறித்த ஹெலி சம்பவ இடத்துக்குச் சென்றது.

இவ்வாறு சென்ற ஹெலி, விபத்துக்குள்ளான கப்பலிலிருந்த பெருமளவு மாலுமிகளை மீட்ட பின்னர் இறுதியாகச் சென்ற வேளையே விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான ஹெலியில் இருந்த பத்துப் பேரில் நால்வர் மீட்கப்பட்டு நெதர்லாந்து துறைமுகப் பகுதியிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மிகுதி ஆறு பேரின் நிலை தொடர்பாக எதுவும் தெரியவில்லையென அதிகாரிகள் தெரிவித்தனர்.




# ஈராக்கில் சிறுவனை சுட்டுக்கொன்ற அமெரிக்க வீரருக்கு 3 வருட சிறை!

ஈராக்கில் 16 வயது சிறுவன் ஒருவனை சுட்டுக் கொன்ற குற்றத்துக்காக அமெரிக்க படை வீரர் ஒருவருக்கு மூன்று வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க படைவீரரான சார்ஜன்ட் ஜோனி கோன் ஜீனியர் என்பவருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஆனாலும், இப்பொதுமகன் திட்டமிட்ட வகையில் தன்னால் சுட்டுக்கொல்லப்படவில்லையென ஜோனி தெரிவித்தார்.

மற்றைய படைவீரர் ஒருவரை காப்பாற்றுவதற்காகவே ஜோனி இந்தக் கருணைக் கொலையைப் புரிந்ததாக இவரது சட்டத்தரணி தெரிவித்தார். ஜோனியின் முறைப்பாட்டை விசாரித்த ஏழு பேரடங்கிய குழுவே இத்தீர்ப்பை வழங்கியுள்ளது. அத்துடன் இந்த இராணுவ வீரரின் பதவியும் குறைக்கப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி அமெரிக்கப் படையினர் ஈராகின் சதார் நகரில் வீதியோரமாக நின்றிருந்த குப்பை வாகனத்தில்-கிளர்ச்சிவாதிகள் குண்டு வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் அதன்மீது துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இதன் போது அந்த வாகனத்தில் 16 வயதுடைய சிறுவன் சாரதியாக இருந்துள்ளான். அந்தச் சிறுவன் அமெரிக்கப் படையினரின் இந்தத் தாக்குதலில் காயமடைந்தான்.

வயிற்றுப் பகுதியில் காயமடைந்த இந்தச் சிறுவனின் உடல் முழுவதும் எரிகாயங்களுக்கு இலக்கானது. இந்த நிலையில் அமெரிக்கப் படையினர் குறித்த சிறுவனைக் காப்பாற்ற முயற்சி எடுத்ததாகவும் இந்தச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இவ்வாறு காப்பாற்ற முடியாத நிலையிலேயே அந்தச் சிறுவனை ஜோனி சுட்டுக் கொன்றதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

### பிரதமர் ஷரோனின் அரசுடன்

# இணைவது குறித்து தொழிற்கட்சி பேச்சுக்களை நடத்துகின்றது!



இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனின் லிக்குவட் கட்சியின் அரசாங்கத்துடன் இணைவது குறித்து தொழிற்கட்சியின் தலைவர் ஷிமொன் பெரஸ், பிரதமர் ஷரோனுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

மேற்குக்கரையின் காஸா நிலப் பகுதியிலுள்ள ஜெவிஸ் குடியிருப்பு பகுதிகள் அனைத்தும் முற்றாகவே விலக்கப்படவேண்டும் என்பதே தமது நிலைப்பாடென ஷிமொன் பெரஸ் தெரிவித்தார்.

அத்துடன் திட்டமிடப்பட்ட பாதை வரைபை நடைமுறைப்படுத்தி பலஸ்தீனர்களுடன் சமாதானத்தை ஏற்படுத்தவேண்டுமென தமது கட்சி அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் ஷரோனின் அரசாங்கத்துக்கு ஆதரவளித்த சினுாய் கட்சி தனது ஆதரவை கடந்த வெள்ளிக்கிழமை விலக்கியதை அடுத்து ஷரோனின் அரசாங்கம் பெரும்பான்மையை இழந்தது.

இந்த நிலையில் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு பதிலாகத் தொழிற்கட்சியின் ஆதரவை ஷரோன் கோரியிருந்தார்.

ஜெவிஸ் குடியிருப்புக்களையும், குடியிருப்பாளர்களையும் விலக்குவதென்பது கடினம். ஆனாலும், சமாதானத்தின் விலைக்கு அதனை செய்துதான் ஆகவேண்டும். அத்துடன் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவே நாம் அரசாங்கத்துடன் இணையவுள்ளோம் என ஷிமோன் பெரஸ் தெரிவித்தார்.

இதேவேளை, லிக்குவட் கட்சியுடன் தொழிற்கட்சி இணைவதற்கிருந்த தடையை நீக்குவதற்கு ஆதரவாக லிக்குவட் கட்சியின் 62 வீதமானோர் கடந்த வியாழக்கிழமை வாக்களித்தனர்.

### உக்ரைன் எதிர்க்கட்சித் தலைவருக்கு

# விஷம் கொடுத்தது தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது



(வியன்னா)

உக்ரைன் எதிர்க்கட்சித் தலைவர் யுஷ் செஸ்கோ கடந்த செப்ரெம்பர் மாதம் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த வேளை, அவரை விஷம் கொடுத்து கொல்ல முயற்சி நடந்ததாக வைத்தியர்கள் தெரிவித்த நிலையில், இது தொடர்பான குற்றவியல் விசாரணைகளை உக்ரைன் அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.

யுஷ் செஸ்கோவின் உடல்நிலை நஞ்சு செலுத்தியதாலேயே பாதிக்கப்பட்டதாக வியன்னாவிலுள்ள வைத்தியர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். தமது நீடித்த பரிசோதனையின் பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், டயஷின் என்ற மாத்திரையை வழங்கியதாலேயே யுஷ் செஸ்கோவின் முகம் விகாரமடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

யுஷ் செஸ்கோவுக்கு வழங்கப்பட்ட மாத்திரை மிகவும் ஆபத்து நிறைந்தது எனவும், இவருக்குச் சிகிச்சை அளித்திராவிட்டால் அவர் உயிரிழந்திருக்கக் கூடுமெனவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

யுஷ் செஸ்கோவின் உடல்நிலை குறித்து அமெரிக்கா மிகவும் ஆழ்ந்த அனுதாபங்களைக் கொண்டுள்ளதாகவும், எனவே உக்ரைன் அதிகாரிகள் இது தொடர்பாக பூரண விசாரணையை நடத்த வேண்டுமென அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களப் பெண் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

உக்ரைன் அதிகாரிகள் தனக்கு நஞ்சு கொடுத்து கொல்ல முயற்சித்ததாக யுஷ் செஸ்கோ தெரிவித்த குற்றச்சாட்டை அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

ஆனால், டயஷின் மாத்திரை நஞ்சல்ல எனவும், இந்த மாத்திரையை உட்கொண்டால் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும், ரஷ்ய சுகாதார அமைச்சின் அதிகாரியான யூரி ஒஸ்ரா பெங்கோ தெரிவித்தார்.

இதேவேளை, உக்ரைனில் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு மீளவும் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.


மகிழ்ச்சிகரமான நிறைவான மக்கள் சேவையில்

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

கூட்டுறவு நகர்

CO -OP CITY

மங்களகரமான ஆரம்பம்

2004.12.14

செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணி

இது உங்கள் நிறுவனம்! மக்கள் நிறுவனம்!

உங்கள் வரவும் உங்கள் ஆதரவும் எம்மை மகிழ்விக்கும்.

உங்கள் அனைவரையும் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்.

நன்றி

உங்கள் தேவை - எங்கள் சேவை

குறைந்த விலையில் தரம் நிறைந்த பொருட்கள்

127, காங்கேசன்துறை சாலை,
யாழ்ப்பாணம்.

தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

மாறிவரும் சிந்தனைக்கு ஏற்ப கூட்டுறவின் நவீன சேவைகள்

யாழ்-குடாநாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணியில்....

சுத்தமாக பொதிசெய்யப்பட்ட மளிகைப் பொருட்கள், இறைச்சி வகைகள்,
புதுவகையான ஐஸ்கிறீம் வகைகள் குளிர்பான வகைகள்
பழவகைகள், பழரசங்கள், ஆங்கில மருந்து வகைகள், அன்பளிப்பு, அழகுசாதன வாசனைப் பொருட்கள், பாடசாலைப் பொருட்கள்,
எழுதுகருவிகள், சிறுவர் சிறுமியர்களுக்கான அன்பளிப்புப் பொருட்கள்.

இவை மட்டுமன்றி

ஊரக வைப்பகம், மருந்தகம், முற்றிலும் நவீன மயப்படுத்தப்பட்ட பதிப்பகம் (ஓவ்(f) செற்).
தொலைத் தொடர்பகம்
(பக்ஸ், போட்டோப் பிரதி, றோணியோ அட்டையிடுதல்)
சுத்தம், சுகாதாரம் நிறைந்த உணவகம், கூட்டுறவின் உள்ளூர் உற்பத்திகளின் காட்சியறையும், விற்பனையும்.

இவை அனைத்தையும் ஒரே மாளிகையில், ஒரே இடத்தில் குளிரூட்டப்பட்ட கணனிமய சேவையினூடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

(C/3456)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நீதிமன்றத்தின் அதிகாரங்களை நாடாளுமன்றம் மாற்றுவதா?

## ஜனாதிபதி சந்திரிகா கேள்வி

(கொழும்பு)

நாட்டின் உயர் பிரிவான உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பை நாடாளுமன்றின் மூலம் மாற்ற முடியுமென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையானது ஏற்றுக் கொள்ள முடியாததென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று மாத்தறையின் நில்வள எனுமிடத்தில் கரசற மண்டபத்தில் ஜினதாச பீரிஸ் ஜனாதிபதி சந்திரிகா குறித்து எழுதிய புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

எஸ்.பி.திஸநாயக்காவிற்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பானது சுயாதீனமானதாகும். உயர்நீதிமன்றின் இந்த தீர்ப்பை வலுவிழக்கச் செய்வது குறித்து தம்மை சட்டத்தரணி எனக் கூறிக்கொண்டு செயற்படும் ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மஹிந்த விஜயசேகர ஒரு மோசடிக்காரன்.

அவர் உயர்நீதிமன்றின் தீர்ப்பை மாற்றவேண்டும் எனக் கேட்பது கேலிக்கூத்தானது.

அததுடன் உயர்நீதிமன்ற தீர்ப்பை மாற்றவேண்டும் என்று கூறும் கழுதைகளும் நாடாளுமன்றில் உள்ளனர். இந்தத் தீர்ப்பை மாற்ற வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பேராசிரியருமான ஜி.எல்.பீரிஸ் ஆலோசனை வழங்கியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் உண்மையில் பேராசிரியரா என்பது ஆராயப்படவேண்டும். எனவே இவரது பட்டம் குறித்து விசாரணை நடத்துமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

அத்துடன் அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியினர் நாடாளுமன்றில் மிகமோசமான முறையில் நடந்துகொண்டுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் சிரேஷ்ட சட்ட வல்லுனரைப்போல நடந்துகொள்கின்றார். உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எவரும் மாற்றமுடியாது என்பது அவருக்குத் தெரியாதா?

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை கட்டுப்படுத்த ரணிலுக்குத் தெரியவில்லை. ஆனால், என்னால் அவர்களைக் கட்டுப்படுத்தமுடியும்.

இந்திய கலைஞரான ஷாருகானின் இசை நிகழ்வில் இடம்பெற்ற குண்டு வெடிப்பிற்கு ஜாதிக ஹெல உறுமயவின் இரண்டு, மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களும், கோட்டை ஆசனத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக உள்ள ஒரு மோசடிக்காரனும், திருடனுமே காரணம்.

தற்போது நாட்டில் குண்டுத் தாககுதலை விடுதலைப் புலிகளின் தலைவர் நடத்தவில்லை ஐக்கிய தேசியக்கட்சியே நடத்துகிறது.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியும் எனது அரசாங்கமும் ஒருமித்த இணக்கத்தைக் கொண்டுள்ளன. எனவே, இதனை மேம்படுத்திக் கொள்ள அந்தக் கட்சி முன்வர வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (01)

## மூன்று நாள் காய்ச்சலால் குடும்பஸ்தர் மரணம் !

கடந்த மூன்று தினங்களாக காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

காரைநகர் புது வீதியைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியம் (வயது 48) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் நேற்று மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, சமீபகாலமாக ஏற்பட்ட காலநிலை மாற்றங்களையடுத்து காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பெருமளவு நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

வைரஸ் காய்ச்சல், மலேரியா போன்றவற்றால் பாதிக்கப்பட்ட பெருமளவு நோயாளர்கள் குடாநாட்டில் பல்வேறு மருத்துவமனைகளையும் நாடிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வன்னியிலிருந்தும் காய்ச்சல் பீடிக்கப்பட்ட நோயாளர்கள் நாளாந்தம் யாழ். போதனாவைத்தியசாலைக்கு கொண்டுவரப்படுவதாகவும் தெரிவிககப்படுகிறது.

## வயோதிபர் மரணம் !

சுன்னாகத்தில் இடம்பெற்ற விபத்தொன்றில் சிக்கிக் காயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட வயோதிபர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

இந்த விபத்தில் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த கந்தையா சுந்தரலிங்கம் (வயது 74) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் சுன்னாகம் நாகம்ஸ் தியேட்டருக்கு முன்பாக சைக்கிளில் பயணம் செய்த போது - பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் இவர் மீது மோதியது. இதனால் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் இவர் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபரை விசாரணைக்காக சுனாகம் பொலிஸார் கைதுசெய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

### தமிழகம் – பாம்பனில்

## நாடு திரும்ப முயன்ற 20 தமிழ் அகதிகள் கைது!

(கொழும்பு)

பாம்பனில் இருந்து படகு மூலம் சட்டவிரோதமாக இலங்கைக்கு வர முயன்ற அகதிகள் 20 பேரை கியூ பிரிவு பொலிஸார் கைதுசெய்தனர்.

இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்டதால் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக தமிழகத்திற்கு சென்று பல்வேறு இடங்களிலுள்ள அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இலங்கையில் அமைதி நிலவுவதால், மீண்டும் இலங்கைக்கு இராமேஸ்வரம், தனுஷ்கோடி கடல் வழியாக படகுகள் மூலம் நாடு திரும்புகின்றனர்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் பாம்பன் கடற்கரையிலிருந்து இலங்கைக்கு திரும்பமுயன்ற 20 பேரை கியூ பொலிஸார் கைதுசெய்து பாம்பன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். இவர்கள் இலங்கைக்கு வருவதற்கு கடத்தல் முகவருக்கு 10 ஆயிரம் ரூபாவை செலுத்தியதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

## புலிகளின் அரசியற்துறை அலுவலகம் மீது திருமலையில் தீ வைக்க முயற்சி !

(திருகோணமலை)

திருகோணமலை - நிலாவெளியிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை செயலகத்தை பேரினவாத சக்திகள் சிலர் இணைந்து நேற்று அதிகாலை தீ வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

இந்தத் தகவலை நிலாவெளி பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் தூயவன் தெரிவித்தார்.

கடற்படையின் பின்னணியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது -

நேற்று அதிகாலை நானும் சில அரசியற் துறைப் போராளிகளும் அலுவலகத்தில் உறங்கிக் கொண்டிருந்த போது பெற்றோல் வாடை வீசியது. அந்த நேரம் எழுந்து வெளியே சென்று பார்த்த போது சில நபர்கள் தங்களிடமிருந்த பொருட்களை அந்த இடத்தில் போட்டுவிட்டு சைக்கிளில் தப்பிச் செல்வதைக் கண்டோம்.

அவர்களின் சைக்கிள் தடயங்களை நாம் பின்தொடர்ந்து சென்ற போது சில சைக்கிள்கள் அண்மையிலுள்ள கடற்படை முகாம் பக்கமாகவும் ஓரிரு சைக்கிள்கள் வேறு பக்கமாகவும் சென்றன.

இது பற்றி கடற்படைக்குத் தெரிவிக்க முகாமுக்கு முன்பாக வந்து லைட் அடித்த போதும் அவர்கள் அங்கே வரவில்லை.

இதனையடுத்து அலுவலகம் திரும்பிய நாம் தடயப் பொருட்களான 3 பெற்றோல் போத்தல்கள், துப்பாக்கி சுத்திகரிப்புக்காக இராணுவம் பயன்படுத்தும் துணி ஆகியவற்றையும் கண்டெடுத்தோம். பெற்றோல் ஊற்றி அலுவலகத்தை தீ வைப்பதே இந்த பேரினவாதிகளின் நோக்கம் என அவர் தெரிவித்தார்.

## பாடகி எம்.எஸ்.சுப்புலட்சுமி...

திரையுலகில் அறிமுகப்படுத்தினார். இதன் பின்னர் அவர் சகுந்தலை, மீரா உட்பட பல படங்களில் நடித்தார். மீரா படத்தில் அவர் பாடி நடித்த பாடல்தான் இன்று வரை ஒலித்துக் கொண்டிருக்கும் "காற்றினிலே வரும் கீதம்" என்ற பாடலாகும்.

இதன் பின்னர் கர்நாடக இசை உலகில் இசைப்பேரொளியாக 60 ஆண்டுகளுக்கும் மேல் புகழ்பெற்று விளங்கினார். இவர் 1940 ஆம் ஆண்டு சதாசிவம் என்பவரைத் திருமணம் செய்தார்.

இந்தியாவில் மட்டுமல்லாது சர்வதேச அளவிலும் எம்.எஸ்.சுப்புலட்சுமி புகழ் பெற்று விளங்கினார்.

1966 ஆம் ஆண்டு ஐ.நா சபையில் இவர் தனது கச்சேரியை நடத்தி சர்வதேச தலைவர்களையும் கவர்ந்தார்.

கோவில்களில் ஒலிக்கும் வெங்கடேச சுப்ரபாதம் இவராலேயே பாடப்பட்டதாகும்.

இனிமையான குரலால் இவர் 14 இற்கும் மேற்பட்ட பட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் 1954இல் பெற்ற பத்மபூசன் விருது, 1975இல் பெற்ற பத்மவிபூஷன் விருது, 1996 இல் கலாரத்னா விருது, இறுதியாகப் 1998ஆம் ஆண்டு பெற்ற பாரத ரத்னா விருதுகள் இவர் பெற்ற விருதுகளில் முக்கியமானவையாகும்.

இவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் வகையில் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் இன்று சென்னைக்கு வருகைதரவுள்ளார். அத்துடன் பல்வேறு தலைவர்களும் இவருக்கு நேற்றைய தினம் அஞ்சலி செலுத்தினர்.

## லெப்.கேணல் மறவன்...

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும்போது இடைவழியிலேயே உயிரிழந்தார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், இளைப்பாறிய ஆசிரியராவார். இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தவேளை விடுதலைப் புலிகள் அமைப்பில் முழுமையாக இணைந்துகொண்ட இவர், கடற்புலிகளின் அரசியற்துறை, கடற்தொழில் பிரிவில் கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள் சம்மேளனத்தின் மேலாளராகப் பணியாற்றினார்.

இவரின் வித்துடல் அனைத்து மாவட்டங்களுக்கும் எடுத்துச்செல்லப்பட்டு, மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அஞ்சலிக் கூட்டங்கள் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அன்னாரின் வித்துடல் நேற்று மாலை முகமாலையூடாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டது.

பின்னர் நேற்று மாலை குருநகர் கலையரங்கத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு கடற்தொழிலாளர் சமாசத் தலைமையில் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரை யாழ். மாவட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் கலைவிழி, வணபிதா சகாயநாயகம் அடிகளார் ஆகியோர் ஏற்றிவைத்தனர். வித்துடலுக்கான ஈகச்சுடரை மாவீரர் லெப். கேணல் மறவனின் மகனான எட்மன் ஏற்றிவைத்தார்.

நினைவுரைகளை வண. பிதா பி.ஜெகசேகரம் அடிகளாரும், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கத் தலைவர் சொலமன் சூ.சிறில், கடற்புலிகளின் தாக்குதல் தளபதிகளில் ஒருவரான செழியன் ஆகியோர் நிகழ்த்தினர்.

வித்துடலுக்கான மலர்மாலை யாழ். மாவட்ட துணை அரசியற் துறைப் பொறுப்பாளர் செம்மணன், யாழ். மாவட்ட கடற்புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் அருண், கிழக்கு மாகாண கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன், குருநகர் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் அணிவித்தனர்.

இதனையடுத்து வித்துடல் இன்று காலை 6 மணிக்கு தீவகம் வேலணையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் வித்துடல் வலிகாமம் மேற்கு மாதகல் சுழிபுரம் கிராமங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

நாளை வலிகாமம் மேற்கில் இருந்து வடமராட்சிப் பிரதேசத்துக்கு எடுத்துச் செல்லப்படும் வித்துடல் பகல் 12 மணிக்கு வல்வெட்டித்துறையிலும், பகல் 2 மணிக்கு பருத்தித்துறையிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நினைவு வீரவணக்கக் கூட்டங்கள் நடைபெறும்.

பின்னர் வடமராட்சியிலிருந்து முகமாலை புதுக்காடு வழியாக மாலை வன்னிக்கு எடுத்துச் செல்லப்படும் வித்துடல், புதன்கிழமை காலை 7.30 மணிக்கு பூநகரியிலும், காலை 10 மணிக்கு முழங்காவிலிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நினைவு வீரவணக்கக் கூட்டங்கள் நடைபெறும்.

அங்கிருந்து வெள்ளாங்குளம் வழியாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

வித்துடல் மாலை 3 மணிக்கு செம்மலையிலும் மாலை 5 மணிக்கு முல்லைத்தீவு நகரிலும் மாலை 7 மணிக்கு புதுக்குடியிருப்பிலும் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நினைவஞ்சலிக் கூட்டங்கள் இடம்பெறும்.

அன்று இரவு வடமராட்சி கிழக்கு பிரதேசத்துக்கு எடுத்துச் செல்லப்படும் வித்துடல் அவரின் சொந்த ஊரான தாளையடியில் உள்ள இல்லத்தில் வைக்கப்படும்.

பின்னர் வியாழக்கிழமை மாலை 2 மணிக்கு தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்துக்கு வித்துடல் எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி இடம்பெறும்.

அதன் பின் ஆலய முன் முகப்பு மண்டபத்தில் மாலை 3 மணிக்கு இடம்பெறும் நினைவஞ்சலிக் கூட்டத்தின் பின்னர் எடுத்துச் செல்லப்படும் வித்துடல் உடுத்துறை மாவீரர் துயிலும் இல்ல புனித விதைகுழியில் விதைக்கப்படும். (21)

## தினேஷ்...

கும் நன்றி தெரிவித்துள்ளார்.

லெபனானிலுள்ள தூதுவராலய அதிகாரிகளின் உதவியுடன் நேற்றுக் காலை விமானம் மூலம் கொழும்பு திரும்பிய தினேஷ் ராஜரட்ணம், அவரது குடும்ப உறுப்பினர்களாலும், வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளாலும் வரவேற்கப்பட்டு, அங்கிருந்து வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் உத்தியோகபூர்வ இருப்பிடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு அமைச்சரைச் சந்தித்த பின்னர் நேரடியாக தனது வத்தளை இல்லத்துக்குச் சென்றார். (01)

## கடத்தப்பட்ட...

வினரிடம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடத்தலுக்கு பயன்பட்டதாகக் கூறப்படும் கார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (82)

O/L - 2004
பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்
DMI
Jaffna

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.